# வல்லூறுகளும் புறாக்களும்: சமாதானத்தைப் பேணி நடைமுறைப்படுத்தலும் மோதுகைத் தீர்வும்

விப்கே ஹன்சன், ஒலிவர் ரம்ஸ்பொதாம், டொம் வூட்ஹவுஸ்




**1. அறிமுகம்** 364

**2. சமாதானம் பேணலின் தோற்றமும், வளர்ச்சியும்** 365

சமாதானம் பேணுதலின் வளர்ச்சி : 1956-1988 365

பனிப்போர் காலத்துக்குப் பின்னர் சமாதானப் பேணுகை -1990 366

**3. சமாதானப் பேணுகைக்கான புதிய சாவல்கள்** 370

**4. சமாதானத்தை கொண்டு நடத்துகையில் புதிய வளர்ச்சிகள்** 371

**5. மோதுகை ஆய்வும், மோதுகை கட்டியெழுப்புகையும்** 374

மோதுகைப் பகுப்பாய்வும் மனிதநேய தலையீடுகளும் 375

வன்மையைக் கட்டுப்படுத்தலும் மோதுகைத் தீர்வும் 377

சமாதானத்தைக் கொண்டுநடத்துகையும் மோதுகைத் தீர்வுத் திறன்களும் அவற்றுக்கான பயிற்றுகையும் 378

**6. கற்றுக்கொண்ட படிப்பினைகளும் பிரயோகங்களும்** 381

**7. எதிர்கால முன்னுரிமைகள்** 385

மோதுகை நெருக்கடிகளுக்கான துரிதபதிற்குறி தகைமைகளை மேம்படுத்துகை 385

சமாதானத்தைக் கொண்டுநடத்துகைக்கான படைநிலை, காப்புநிலை, குடிநிலை வகிபாகங்களை ஒருங்கிணைத்தல், சமச்சீராக வைத்திருத்தல் மற்றும் வேறுபடுத்தல் 387

**8. எதிர்கால விருப்புத் தெரிவுகள்** 392

**9. உசாத்துணை மற்றும் மேலதிக வாசிப்பு** 394

# வல்லூறுகளும் புறாக்களும்:சமாதானத்தைப் பேணி நடைமுறைப்படுத்தலும் மோதுகைத் தீர்வும்

விப்கே ஹன்சன், ஒலிவர் ரம்ஸ்பொதாம், டொம் வூட்ஹவுஸ்

## 1. அறிமுகம்

பனிப்போர் முடிவுற்றதிலிருந்து ஐ.நா. சமாதானம் பேணலின் எண்ணக்கரு மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய இரண்டுமே முக்கியமான மற்றங்களுக்குள்ளாகியிருக்கின்றன. பனிப்போரின்போது ஐ.நா. வின் செயற்பாடுகள் பாரபட்சமற்ற, பலாத்காரமற்ற, மோதுகைத் தரப்பினரின் இணக்கத்துடனான இடையீடு மற்றும் உடன்பாடுகாணப்பட்ட ஒரு சமாதானத்துக்கான முன் நிபந்தனை ஆகிய கோட்பாடுகளின் கீழேயே பொதுவாக அமைந்திருக்க, அதன் மிகச்சமீபத்திய சமாதானப்பணிகள், கூடுதலாக உள்நாட்டு யுத்தங்களின் சூழமைவிலேயே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதன் விளைவாக இக்கோட்பாடுகள், அதிகரித்துச்செல்லும் அழுத்தங்களுக்குள்ளாகியிருப்பதுடன், ஐ.நா வின் அண்மைக்காலப் பணிகளின் செயல் நிறைவேற்றத்தையும் கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியிருக்கின்றன. பொஸ்னியாவில் மிகக் குறைவாகவும், சோமாலியாவில் மிக அதிகமாகவும் செயற்பட்டமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு அது ஆளாகியிருக்கின்றது. இவ்விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் விதத்தில் தேசிய மற்றும் சர்வதேச (ஐ.நா.) மட்டங்களிலும் சமாதானம் பேணுதல்பற்றிய புதிய சிந்தனைகள் பரிணாமம் பெற்றுள்ளன. முக்கியமாக, சோமாலியா அனுபவத்தின்பின்னர் எழுந்த சமாதானம் பேணுதல்பற்றிய எச்சரிக்கையானது, அதிக வீரியமான அனுகுமுறையை சமாதானத்தைக் கட்டியெழுப்பவல்ல அதிகரித்த திறமையுடன் இணைக்கவிழையும் புதிய சிந்தனைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

சமாதானம் பேணுவோர் மோதுகையை முகாமைசெய்யும் தமது பொறுப்புகளைப் பூர்த்திசெய்ய விழைவதால், மோதுகைத்தீர்வு ஆராய்ச்சியினால் விருத்திசெய்யப்பட்ட அறிவானது உலகெங்கும் சமாதானம் பேணுவோருக்குப் பொருத்தமுடையதாகவிருக்கும் என்பதைக் காட்டுவதே இவ்வத்தியாயத்தின் பிரதான தொனிப்பொருளாகும். சமீபத்திய விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும்விதத்திலும், சமாதானம் பேணுதல் மற்றும் மோதுகைத் தீர்வு என்பவற்றுக்கிடையே ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியதன் அவசியத்தின்மீதான ஆரம்பப்பாடங்கள் பற்றியும் கருத்துரைப்பதற்குமாக, சமாதானம் பேணுதற் கோட்பாடு எவ்வாறு விருத்திசெய்யப்படுகிறது என்பதை இவ்வத்தியாயம் மேலும் விவரிக்கும். சமாதானப் பேணுகை செயற்பாடுகளில் பலம் பயன்படுத்தப்படவேண்டுமா, அப்படியானால் எந்த அளவுக்கு என்பதுபற்றி நேரடியாக விவாதிப்பதை விட்டுவிட்டு, சமாதானப் பேணுகையின் எண்ணக்கருக்களின் பரிணாம வளர்ச்சிக்கு மோதுகைத்தீர்வுக் கோட்பாடு செய்யக்கூடிய பங்களிப்பு மற்றும் அவ்வெண்ணக்கருக்களின் நடைமுறைப் பிரயோகம் என்பவற்றின்மீதே இவ்வத்தியாயம் கவனம்செலுத்தும்.

சமாதானத்தைப் பேணுதலானது மோதுகை முகாமையின் ஒரு கருவியாகவே நீண்டகாலம் கருதப்பட்டுவந்தது, ஆனால் துரதருஷ்டவசமாக பின்னர் அதில் ஒரு தவறுநிலை ஏற்பட்டது. ஏனெனில், வழமையாக மோதுகையின் அடிப்படைக் காரணிகளைக் குறிவைத்துச் செயற்பட அது தவறுகின்றது. ஆயினும், ஒருபுறத்தில் வன்செயலைக் கட்டுப்படுத்தல், மறுபுறத்தில் சமாதானத்தைக்

கட்டியெழுப்பும் முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தல் ஆகிய இரட்டைக் குறிக்கோளுக்குத் தனிப்பட்ட அவதானம் செலுத்தும் அதேவேளை, மோதுகைத்தீர்வுக்கான கருவி என்ற வகையில் அதன்மீது எம் கவனத்தைச்செலுத்துவோம். சமாதானத்தை பேணுதலானது பல ஆண்டுகளாக பல்வேறு அமைப்புகளால் நிறைவேற்றப்பட்டுவந்துள்ளமையை நிச்சயமாக நாம் அங்கீகரிக்கும் அதேவேளை, இங்கு ஆராயப்படும் அம்சங்களில் அநேகமானவை ஏனைய அமைப்புகளின் சமாதானம் பேணுகையையே மையமாகக் கொண்டிருக்கும்.

முதல் பிரிவானது சமகாலத்துச் சமாதானம் பேணுதலின் மட்டெல்லைகளின் முக்கிய விடயங்களை விபரிக்கும். இரண்டாம் பிரிவானது மோதுகை ஆராய்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் சமாதானம் பேணலின் செயலாற்றுகைக்கான கோட்பாட்டைக் கட்டியெழுப்புதல் என்பவைபற்றி விரிவாக விளக்குவதாக அமையும். இது மேலும் மூன்று சூழமைவு பின்புலங்களில் வைத்து நோக்கப்படும்.

- மோதுகைப் பகுப்பாய்வு மற்றும் தலையிடுகைக் கட்டுக்கோப்புகளை ஏற்படுத்துவதற்கான அதன் இயைபு
- வேறுபடுகின்ற கால அளவீடுகள் மற்றும் குறிப்பாக ஆரோக்கியமான சமாதானம் பேணல் பற்றிய புத்தம்புதிய ஆய்வுகள் தொடர்பாக, வன்செயல் மோதுகையை முகாமை செய்யும் பொழுது முன்னர் கூறியவற்றை வேறுபடுத்தி அறிதல்.
- மோதுகைத் தீர்வின் பங்களிப்பின்மீது கவனத்தைச்செலுத்தியவாறு தனிவேறான ஆற்றல்கள் மற்றும் சமகாலச் சமாதானம் பேணற்பணிகளுக்குத் தேவையான பயிற்சிகள் ஆகியனவற்றை ஆராய்தல்.



சமாதானப் பேணுகையில் மோதுகைத் தீர்வுக் கொள்கையைப் பிரயோகித்தல் பற்றியதும் அவை பிரயோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றியதுமான கண்ணோட்டங்களின் ஆய்வுரை ஒன்றுடன் இப்பிரிவு முடிவடையும். இறுதிப்பிரிவானது, ஐ.நா. வின் சமாதானம் பேணுதல் திறமையை வலுப்படுத்துவதற்கான மிகப் பிந்திய முயற்சிகளைக் கவனத்திலெடுத்ததன் பின்னர் சமாதானப் பேணுகையின் எதிர்காலம் பற்றிய கருத்துக் குறிப்புடன் நிறைவுறும்.

## 2. சமாதானம் பேணலின் தோற்றமும், வளர்ச்சியும்

### 2.1 சமாதானம் பேணுதலின் வளர்ச்சி : 1956 -1988

“சமாதானப் பேணுகை” எனத் திட்டவட்டமாக அழைக்கப்பட்ட முதற்பணிக்குழு “ஐ.நா.அவசரகாலப்படை” (UNEFI) யாகும். 1956 சூயெஸ் நெருக்கடிக்குப் பதிற்செயற்பாடாக யுத்த நிறுத்தத்தையும், எகிப்திய ஆட்புலத்திலிருந்து பிரித்தானிய, பிரெஞ்சு மற்றும் இஸ்ரேலியப்படைகளை மீளப்பெறுதலையும் அவதானிப்பதற்காக சினாய் தீபகற்பத்துக்கு அது அனுப்பப்பட்டது. ஐ.நா. வின் முதல் ஆயுதந்தரித்த சமாதானம் பேணும் செயற்பாடென்றவகையில் UNEFI ஐ.நா. வின் ஏனைய அமைதிப் பணிகளுக்கு முக்கியத்துவமான ஒரு முன்னோடியாக விளங்கியது.

மேலும் மோதுகையைக் கட்டுப்படுத்துவதில் ஆயுதந்தரித்த மற்றும் நடுநிலையான படைகள் கொண்டிருக்கக்கூடிய விழுமியங்களுக்கு அது ஒரு பரீட்சைக்களமாக விளங்கியது. தனக்கிடப்பட்ட ஆணையை நிறைவேற்றுவதில் அப்பணித்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியதுடன், அப்போதிலிருந்து எதிர்காலப் பணித்திட்டங்களுக்கான பெறுமதிமிக்க வழிகாட்டல்களாக விளங்கிவருகிற ஒரு தொகுதி விதிமுறைகளும் அதன்பிரகாரம் ஏற்படுத்தப்படலாயின. அப்போதைய

செயலாளர் நாயகமான டாக் ஹாமஷீல்ட் மற்றும் பொதுச்சபைத் தலைவராயிருந்த லெஸ்டர் பியர்சன் ஆகியோரால் அவ்விதிமுறைகள் பின்வருமாறு அடையாளங் காணப்பட்டன:

- பணித்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்குப், பிணக்குப்பட்டுநிற்கும் தரப்பினரின் சம்மதம்
- தற்பாதுகாப்புக்காகவன்றிப் பலத்தைப் பயன்படுத்தாதிருத்தல்
- படையில் பங்கேற்பதற்கு சிறிய நடுநிலையான நாடுகளிலிருந்து சுயவிருப்பிலான படைப்பிரிவுகளைப் பயன்படுத்தல்
- பாரபட்சமின்மை
- சமாதானம்பேணலின் செயற்பாடுகள் செயலாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருத்தல்

இவ்விதிமுறைகளில் சம்மதம், பாரபட்சமின்மை மற்றும் பலத்தைப் பயன்படுத்தாதிருத்தல் என்பன சமாதானம் பேணலின் மூன்று முக்கிய விதிமுறைகள் என அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன. இவ்விதிமுறைகளில் பலவற்றுக்கெதிராக, குறிப்பாகப் பனிப்போருக்குப் பிந்திய மோதுகையில் சமாதானம் பேணுதலைப் பிரயோகித்தல் தொடர்பான விவாதத்தில்,எதிர்ப்புகளும் அறைகூவல்களும் எழுந்தாலும், இன்றைய சமாதானம் பேணுதலின் சாரமாக வரையறுக்கப்படுவதும் இவையே ஆகும்.

பனிப்போரின்போது மொத்தமாக 13 சமாதானப் பேணுகை செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் பணித்திட்டங்களில் பெரும்பாலும் ஒருசில விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்தன. அவை அரசுகளுக்கிடையேயான மோதுகைகளுக்கே பயன்படுத்தப்பட்டன. எல்லைகளைக் கண்காணிப்பதும், யுத்த நிறுத்த ஏற்பாடுகளுக்குப்பின்னர், மோதல் தவிர்ப்புப் பிரதேசங்களை ஏற்படுத்தலுமே அவற்றுக்கிருந்த ஒரே கடமையாகும். வகையுதாரணரீதியில் பணித்திட்டங்கள், சிறிய மற்றும் நடுநிலை வகிக்கும் ஐ.நா. அங்கத்துவ நாடுகளிலிருந்து பெறப்பட்ட சிறியரக ஆயுதந்தரித்த படைப்பிரிவுகளைக் கொண்டே ஆக்கப்பட்டிருந்தன.



## 2.2 பனிப்போர் காலத்துக்குப் பின்னர் சமாதானப் பேணுகை - 1990

1980களின் பிற்பகுதி தொடக்கம் 1994 வரையான காலப்பகுதிக்குள் உலகெங்கிலும் பொறுப்பேற்கப்பட்ட சமாதானப் பேணுகை செயற்பாடுகள் ஆச்சரியப்படும் விதத்தில் அதிகரித்துள்ளன. 1988இன் தொடக்கத்தில், பனிப்போர் முடிவடையும் தறுவாயில் இருந்ததால், மத்தியகிழக்கில் மூன்று, காஷ்மீரில் அவதானிப்புப் பணிக்குழுவாக ஒன்று மற்றும் சைப்பிரஸில் ஐ.நா. சமாதானம் பேணற்படை (UNFICYP) ஒன்று என ஐந்து செயற்பாடுகளே களத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்தன. 1948க்கும் 1987க்குமிடையே பொறுப்பேற்கப்பட்ட 13 செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில், 1988க்கும் 1996க்குமிடையே 29 செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. 1979க்கும் 1988க்குமிடைப்பட்ட தசாப்த காலத்தின்போது எதுவித செயற்பாடும் இடம்பெறவில்லை.

## பெட்டி 1 : ஐ.நா. சமாதானம் பேணுதலின் வளர்ச்சி, 1988 - 2000

| | 1988 | 1992 | 1994 | 2000 |
|---|---|---|---|---|
| முனைப்பான பணித் திட்டங்களின் எண்ணிக்கை | 5 | 11 | 17 | 14 |
| படையணிகளை அனுப்பி பங்களிப்புச் செய்த நாடுகள் | 26 | 56 | 76 | 89 |
| இராணுவ ஆளணியினர் | 9570 | 11,495 | 73393 | 30350 |
| சிவில் பொலிஸ் | 35 | 155 | 2130 | 7038 |
| ஆளணியினர் | 1516 | 2206 | 2260 | 3243 |
| சர்வதேச சிவில் ஆளணியினர் ஐ.நா. சமாதானம் பேணலுக்கான வருடாந்த வரவு செலவு | $ 230.4 மில்லியன் | $ 1689.6 மில்லியன் | $ 3610 மில்லியன் | $ 2,220 மில்லியன் |

சமாதானப் பேணுகைச் செயற்பாடுகளின் எண்ணிக்கையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இந்த அதிகரிப்புடன், அவற்றின் இயல்பு, இன்னும் குறிப்பாக அவற்றின் கடமை மற்றும் ஆக்கஅமைவு ஆகியவற்றிலான அடிப்படைமாற்றங்களும் சேர்ந்தே காணப்பட்டன. பாரம்பரிய செயற்பாடுகளோடு இணைந்ததாகக் காணப்பட்ட தனியா தொழிற்பாடானது பல்வகைப் பணிகளாக வளர்ச்சியடைந்தன. அதேவேளை பனிப்போருக்குப் பிந்திய சமாதானப் பேணுகைச் செயற்பாடுகள் அதிக பல்வகைமைத் கொண்டதாகவும் சிக்கலானதாகவும் மாறின. சமாதானப் பேணுகையாளர்கள் (இராணுவம், சிவில் பொலிஸ் மற்றும் இராஜதந்திரிகள் போன்ற) பரந்த பல்வேறுவகையான தொழிற்துறைகளிலிருந்து எடுக்கப்பட்டனர். ஆக, சமகால சமாதானம் பேணுகையானது பல்தரப்புடைய, வேறுபாடுகள் பல கொண்ட, பல்தேசிய மற்றும் பல் கலாசார பண்புகளைக் கொண்டதென இப்போது கூறலாம்.

பல்தரப்பு நிலைப்பட்டதென கருதப்படுவது யாதெனில், செயற்பாடொன்றில் பல மட்டங்களிலான செயற்பாட்டாளர்கள் ஈடுபடலாம் என்பதாகும். இவர்கள் இரண்டு அல்லது மூன்று முரண்பட்ட தரப்பினர்களாகவும், சமாதானப் பேணுகையாளர்களாகவும் இவைமாத்திரமல்லாமல் ஐ.நா. மற்றும் ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்களாகவும் இருக்கலாம்.

பல்தேசியம் மற்றும் பல் கலாசாரம் என்பவை சமாதானத்தைப் பேணும் படையின் இராணுவம் மற்றும் சிவில் ஆக்கக் கூறுகள் இரண்டுமே பல்தரப்பட்ட தேசங்களிலிருந்து அல்லது முகவர் நிறுவனங்களில் இருந்து பெறப்படுகின்றன என்பதைக் கருதுகின்றன. அதிலுள்ள ஒவ்வொரு கூறும் தனது சொந்த தனித்துவமான அரசியல் மற்றும் கலாசார பின்னணியையும், முரண்பாட்டு நிலைமைபற்றிய பலவகைப்பட்ட அணுகுமுறைகள் மற்றும் உத்திகளையும் செயல்நிலைக்குக் கொண்டுவரும். பனிப்போரின் முடிவில் (1989, பெப்ருவரி) அவ்வாறு நிறுவப்பட்ட முதல் பல்பரிமாணச் செயற்பாடு நமீபியாவில் ஏற்படுத்தப்பட்ட மாறுநிலைக்கான ஐக்கிய நாடுகளின் உதவிக்குழு (UNTAG) ஆகும். இதனையடுத்து 1992ல், கம்போடியா, சோமாலியா மற்றும் முன்னாள் யூகோஸ்லாவியா ஆகிய இடங்களில் பெரிய அளவிலான செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. யாவும் தமக்கேயுரித்தான தெளிவான கடமைகளை நிறைவேற்றுகின்றதான இராணுவம், சிவில் பொலிஸ் மற்றும் சிவில் நிலைப்பட்ட ஏனையவையும் ஆக்கக்கூறுகளைக்கொண்டு கூட்டிணைந்த பல்பரிமாணச் செயற்பாடுகளாக இருந்தன (காண்க: பெட்டி 2.). ஐ.நா. அங்கத்துவ நாடுகளின் பங்களிப்பை கொண்ட இராணுவக்கூறானது, அதாவது தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை என்பன

ஆயுதந்தரித்த மற்றும் ஆயுதந்தரிக்காத வீரர்களைக் கொண்டுள்ளன. ஆயுதம் தரித்தோர் பெரும்பாலும் இராணுவ அவதானிகளாகக் குறிப்பிடப்படுகின்றனர். முக்கியமாக சிவில் பிரிவு தன்பணியைச் செவ்வனே ஆற்றக்கூடியவகையில் உகந்த சூழ்நிலையை உத்தரவாதப்படுத்தி, அதைப் பேணுகின்ற ஒரு துணைப்பாத்திரத்தில் சேவைபுரிவதையே இராணுவப்பிரிவு தன் கடமையாகக்கொண்டுள்ளது.

இராணுவம் மற்றும் சிவில் பிரிவுகளிடையேயான ஒரு வகிபாகத்தை வகிக்கின்ற முறையில், சமாதானப் பேணுகை செயற்பாடுகளில் சிவில் பொலிஸ் பிரிவுகளும் கூடுதலான முக்கியத்துவத்துடனான செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன. ஐ.நா. பாதுகாப்புச்சபையின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் சர்வதேச பொலிஸ் கண்காணிப்பாளர்கள் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குதல், மற்றும் பொது ஒழுங்கை பேணுதல் ஆகியவற்றிற்கு உதவிபுரிகின்றனர். இறுதியாக, சிலசமயங்களில் எண்ணிக்கையில் இராணுவத்தையும் விஞ்சக்கூடிய அளவினதான சிவில் பிரிவு வருகிறது. இந்த சிவில் பிரிவில் இரு பிரதான குழுக்கள் உள்ளன. முதலாவதாக, அரசாங்கங்களுக்கிடையே தொழிற்படும் அமைப்புக்கள் (IGO) அல்லது இரண்டு அல்லது மூன்று அரசுகளுக்கிடையே செய்யப்பட்ட உடன்பாடுகள்மூலம் ஆணைபெற்ற அமைப்புக்கள் உள்ளன. ஐ.நா. முகவர் நிறுவனங்கள் ஆபிரிக்க ஒன்றியம் (AU) அல்லது ஐரோப்பாவில் பாதுகாப்புக்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பு (OSCE.) அன்றேல் சர்வதேச செஞ்சிலுவை / செம்பிறைச்சங்கம் (ICRC) ஆகிய அனைத்து ஐ.நா. முகவர் நிறுவனங்களையும் இவை உள்ளடக்குகின்றன. இரண்டாவதாக, அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகும். இவை அரசாங்களிலிருந்து வேறுபட்டதாக தேசிய, சர்வதேசிய மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்டவையாகும். போரிடும் நாடுகள்மீது பிரயோகிக்கின்ற வன்மையான அதிகாரம் சார்ந்த செல்வாக்கிலிருந்து தனது பலத்தை பெற்றுக்கொள்ளும் இராணுவப்பிரிவுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில், சிவில் பிரிவின் அதிகார அடிப்படையானது இராஜதந்திர ரீதியானதாகவோ, பொருளாதார ரீதியானதாகவோ, இலட்சியவகையிலானதாகவோ, தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானரீதியானதாகவோ, மனிதநேயமுடையதாகவோ, சட்டரீதியானதாகவோ அல்லது அவை இவை யாவற்றையும் கொண்டிணைந்ததாகவோ இருக்கலாம். சிவில் பிரிவானது, அது நிறைவேற்றும் வெவ்வேறு கடமைகள் மற்றும் பணிகளைப்பொறுத்து பின்வரும் கூறுகளாக அல்லது தனிமங்களாக உள்ளடக்கும் வகையில் மேலும் பிரிக்கப்படலாம். அவை அரசியல், தேர்தல், மனித உரிமைகள் மற்றும் மனித நேயக்கூறுகள் ஆகும்.



1988 இற்கு பின்னரான இராணுவ ஈடுபடுத்தல்கள் , கோட்பாடுகளை விபரிக்க முற்படும் இராணுவ சித்தாந்தங்களின் புதிய இராணுவ கோட்பாட்டு வடிவங்களின் கீழ் மீள்வரையறை செய்யப்பட்டன. இந்த 1988க்குப் பின்னரான பணித்திட்டங்கள் இப்போது “பல்பரிமாணச் செயற்பாடுகள்”, “இரண்டாந்தலைமுறைச் சமாதானப் பேணுகைச் செயற்பாடுகள்'', “விரிவான சமாதானப் பேணுகை'' அல்லது ‘‘இரண்டாந்தலைமுறைப் பல்தேசியப்படைகள்'' என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகின்றன.

## பெட்டி 2 : பல்பரிமாணச் சமாதானப் பேணுகைச் செயற்பாடுகளின் கருமப்பாடுகள்

| ஆக்க அம்சங்கள் | தொழிற்பாடுகள் |
|---|---|
| இராணுவஅம்சங்கள் | • போர் நிறுத்தங்களைக் கண்காணித்தல், செவ்வைபார்த்தல்<br>• படையினருக்கான உறைவிடம் அமைத்தல்<br>• போர்புரியுந்தரப்பினரின் ஆயுதக் களைதல், படைகளைகலைத்தல்<br>• அந்நியப் படைகள் மீளப்பெறப்படுவதை மேற்பார்வை செய்தல்<br>• நிலக்கண்ணிவெடி - விழிப்புணர்வுக்கல்வியும், கண்ணிவெடி அகற்றல்<br>• சமாதானச் முறைவழிக்கு ஆதரவாக ஐ. நா. மற்றும் ஏனைய சர்வதேச நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடு |
| சிவில்-பொலிஸ் அம்சங்கள் | • சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தல்<br>• நீதி நிர்வாக முறைமையொன்றை ஏற்படுத்தி, அதைப் பராமரித்தல்<br>• சட்டத்தைச் செயற்படுத்தல்<br>• அமைப்பு ரீதியான, நிருவாகரீதியான மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள்குறித்துக் கண்காணித்தல், பயிற்சியளித்தல் மற்றும் உள்நாட்டு சட்டச் செயற்படுத்தல். |
| சிவில் அம்சங்கள | **அரசியற் கூறுகள்**<br>அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுதல்<br>• ஒட்டுமொத்தச் சமாதானச் செயல்முறையின் அரசியல் ரீதியான வழிகாட்டல்<br>• இருக்கின்ற அரசியல் நிறுவனங்களின் புனர்வாழ்வுக்கு உதவுதல்<br>• தேசிய இணக்கப்பாட்டை முன்னேற்றுதல்<br>**தேர்தல் கூறுகள்**<br>• தேர்தல் செயல்முறையின் அனைத்து அம்சங்களையும், கட்டங்களையும் கண்காணித்தல் மற்றும், நிச்சயப்படுத்தல்<br>-தொழில்நுட்ப உதவியை ஒருங்கிணைத்தல்<br>• தேர்தல் செயல்முறைகள்பற்றிப் பொதுமக்களுக்கு கல்வியறிவூட்டல் மற்றும் அடிமட்ட நிலையில் உள்ள ஜனநாயக நிறுவனங்களின் அபிவிருத்திக்கு உதவி வழங்கல்<br>**மனித உரிமை கூறுகள்**<br>• மனித உரிமைகளைக் கண்காணித்தல்<br>• மனித உரிமை மீறல்களெனச் சுட்டிக்காட்டப்பட்ட குறிப்பிட்ட சம்பவங்களை ஆராய்தல்<br>• மனித உரிமைகளை முன்னேற்றல்<br>**மனிதநேய கூறுகள்**<br>• மனிதநேய உதவிகளின் வழங்கல் (உணவு மற்றும் ஏயை அவசரகால நிவாரணப் பொருட்களை வழங்கல்)<br>• அகதிகளைத் தம் சொந்த நாட்டுக்கு திருப்பியனுப்பும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்<br>• இடம் பெயர்ந்த நபர்களை மீளக்குடியமர்த்தல்<br>• முன்னாள் போராளிகளை சமூகத்துடன் மீளிணைத்தல் |

## 3. சமாதானப் பேணுகைக்கான புதிய சாவல்கள்

சமாதானப் பேணுகைச் செயற்பாடுகளைத் ஆரம்பத்தில் தொடக்கிவைத்தவர்கள் எனும் பெருமையை இருவர் பெறுவர். இவர்கள் சமாதானத்திற்கான நோபல் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டனர். லெஸ்டர் பியர்சன் 1957 இலும் டாக் ஹாமர்ஷீல்ட் தேகாந்தமாக 1961இலும் சமாதானத்திற்கான நோபல் பரிசை பெற்றுக்கொண்டனர். ஐ.நா. சமாதாப்பேணுகைப் படைகளுக்கு இப்பரிசு 1988இல் கூட்டாக வழங்கப்பட்டது. இருந்தபோதும், 1990களில் ஐ.நா. வின் புகழ், குறிப்பாக அதன் சமாதானம் பேணற்பிரிவின் புகழ் சற்று ஒளிகுன்றியே காணப்பட்து.

புதிய பணிகளுக்கும், சவால்களுக்குமேற்பத் தம்மை மாற்றியமைத்துக்கொள்ள முயன்றமை காரணமாக சமாதானப் பேணுகை கடமைகள் குறிப்பிடத்தக்கவகையில் பல்வகைமையடைந்துள்ள அதேவேளை, இப்பணித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவேண்டிய சூழமைவுகளும் சுற்றாடல்களும் பெரிதும் சிக்கலாயும் மாறியுள்ளன. கொங்கோவில் ONUC மற்றும் லெபனானில் UNIFIL என விதிவிலக்குகள் இருக்கின்றபோதிலும், 1990களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட அநேகமான சமாதானப் பேணுகைச் செயற்பாடுகள், செயற்படும் நாடுகளின் விருப்பத்தையும், ஆதரவையும் கொண்டிருந்தமையால், பொதுவாக அனுமதியான சூழலிலேயே செயற்பட்டன. 1990களின்போது, உள்நாட்டு யுத்த சூழமைவில் அல்லது சிவில் மற்றும் சர்வதேச யுத்த சூழ்நிலையென விபரிக்கப்பட்ட சிக்கலான அரசியல் நெருக்கடியின் நிழலிலும் அதிகரித்த அளவில் பயன்படுத்தப்பட்டன. இச்சூழ்நிலைகளில், எங்கு உள்ளூர் படைகளும், துணைப்படைகளும் தம்மிஷ்டம்போல் செயற்பட்டனவோ அங்கு ஒழுங்குமீறிய, வன்முறை நிறைந்த நிலைமைகளினுள்ளேயே பணியாற்ற ஐ.நா. நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்துடன் மிக அதிகமான சந்தர்ப்பங்களில் ஐ. நா. முகவர் நிறுவனங்கள் எதிர்கொள்ளப்பட்டும், எதிர்க்கப்பட்டும் வந்துள்ளன.



பொதுவாக, அரசுக்குள்ளே நடைபெறுகின்ற யுத்தத்தாலும், கடும் வன்முறையோடு கூடிய சிவில் மோதுகைகளின் தாக்கத்தினாலும் எழுந்துள்ள இச் சவால்கள், சமாதானப் பேணுகையின் முறைவழிகள்பற்றி இருந்துவந்த அநேகமான எடுகோள்களைப் பல்வேறுவழிகளில் கேள்விக்குறியாக்கியுள்ளன. பனிப்போரின் பின்னரான காலப்பகுதியில் எழுந்த மோதுகைகள் ஐ.நா. வின் திறமைகளை உச்சநிலைவரை சோதித்துள்ளதுடன், சோமாலியா, ருவாண்டா மற்றும் பொஸ்னியா ஆகிய இடங்களில் ஏற்பட்ட தோல்விகள் கற்றறிவு புலமை ஏடுகளில் பரவலான கண்டன மதிப்பீடுகள் வெளிவர வழிவகுத்தன.

அத்தசாப்தத்தின் முடிவில், ஐ.நா நிறுவனமானது மோதுகைகளைத்தீர்க்கும் முயற்சிகளோடு செயற்பட்டபோது தனக்கேற்பட்ட ஆகக் கீழ்நிலையிலான அனுபவத்தைக் குறிப்பிடுகிற இரண்டு நிகழ்ச்சிகள் குறித்த விசாரணைகளின் அறிக்கைகளை, தானே வெளியிட்டது (ஐ.நாடுகள் 1999அ ஐக்கியநாடுகள் / 1999 டி) 1994 ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களில் ஏறத்தாழ 800,000 பேர் கொல்லப்பட்ட ருவாண்டாவின் இனப்படுகொலையானது “இருபதாம் நூற்றாண்டின் மிகவும் அருவருக்கத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாக” வர்ணிக்கப்பட்டது. ஒரு வருடம் கழித்து, பாதுகாப்புச்சபையின் 819 ஆம் தீர்மானத்தின் படி (1993 ஏப்ரல் 16) சிவிலியன்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய உலகின் முதலாவது பிரதேசம் எனக் குறிப்பிடப்பட்ட பொஸ்னிய முஸ்லிம் நகரமான சிரெப்றெனிக்கா, இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் இழைக்கப்பட்ட மிகமோசமான யுத்தக்குற்றங்களுள் ஒன்று எனக் கூறப்படும்வகையிலமைந்த சடவடிக்கையால் சேர்பிய உள்ளூர்ப் படைகளால் முற்றுகையிடப்பட்டது. இம்முற்றுகையின்போது அங்கு கடமையிலீடுபட்டிருந்த ஐ. நா. சமாதானம் பேணும் படைப்பிரிவினர் கண்முன்னிலையில், 8000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

முழுச்சனத்தையும் கொலை செய்வதற்கு, விரட்டியடிப்பதற்கு அல்லது அச்சுறுத்துவதற்கான முயற்சிகள் அதிகரித்துவரும் நிலைக்கு முகங்கொடுக்கையில், ஐக்கிய நாடுகளின் நடுநிலையான,

பாரபட்சமற்ற மற்றும் இணக்குவிப்புச்செய்யும் பாத்திரமானது பரிதாபத்துக்குரியவகையில் பற்றாக் குறையாயிருப்பது நிரூபணமாகிக்கொண்டு வந்தது. இதற்கு மேலதிகமாக, பின்வரும் தேவைப்பாடுகளுக்கும் அழைப்பொன்று விடுக்கப்பட்டது. முதலாவது, பல்வேறு வடிவங்களிலான மோதுகைக்கும் பதிற்செயற்பாடு புரிவதற்கு ஐக்கிய நாடுகள் தமது திறமைகளை மேலும் தெளிவுபடுத்தி முன்னேற்றிக் கொள்ளும்பொருட்டுச் சிந்திக்கும் செயல்முறையொன்று. இரண்டாவது “இந்நூற்றாண்டின் இறுதியில் சமாதானம் பேணுகையில் ஏற்பட்ட தவறுகளுக்கு உரிய கவனம் செலுத்துவதும், அடுத்த நுற்றாண்டின் சவால்களைச் சந்திப்பதும்” (ஐக்கியநாடுகள் 19996, 81).

சுருக்கமாகக் கூறின், 1988இல் இருந்து சமாதானத்தைப் பேண அவை அதிகப்படியாக அழைக்கப்பட்ட, அரைகுறையாக அனுமதிக்கப்பட்ட அல்லது விருப்பமே இல்லாத சூழலைக் கொண்ட இடங்களில், புதிய சமாதானப் பேணுகை முயற்சிகளை முறையாகச் செயற்படுத்தவேண்டிய திட்டவட்டமான வழிமுறைகளைத் தெளிவுபடுத்துகின்ற ஓர் எண்ணக்கருவை விருத்தி செய்வதில்தான் சமாதானப் பேணுகைக்கான பாரிய சவால் தங்கியுள்ளது என வாதிடுவது நியாயமானதெனத் தோன்றுகிறது. இது, எண்ணக்கருக்களுக்கு நடைமுறை வடிவங்கொடுப்பதை செயற்படுத்துவதற்கான திட்டவட்டமான ஆலோசனைகளையும் உள்ளடக்க வேண்டும்.

## 4. சமாதானத்தை கொண்டு நடத்துகையில் புதிய வளர்ச்சிகள்

ஐ.நா. சமாதானம் பேணுகை அனுபவத்திலிருந்து ஏற்பட்ட ஏமாற்றமானது அமைதி பேணற்படைகளின் பிரயோக எண்ணிக்கை அதன் 1994 இன் உச்ச நிலையிலிருந்து கணிசமான அளவு குறைவதற்கு வழிவகுத்தது. (காண்க பெட்டி 1) பல அவதானிகள் அதற்கும் மேல் சென்று, சமாதானப் பேணலை - பிராந்திய மற்றும் வல்லரசு மோதுகை முகாமைக்கு ஆதரவாக, வரையறுக்கப்பட்ட, செம்மையான, 1988க்கு முந்திய வடிவினதாக இருந்தாலன்றி ஒரு நடைமுறையாகக் கடைப்பிடிப்பதைக் கைவிடுமாறு அழைப்புவிடுத்துள்ளனர். பொருள்மிகுந்த திறனாய்வுக்கு கட்டுரைகளும் சமாதானப் பேணுகை பற்றிச் சமர்பிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, றிச்சார்ட் பெட்ஸ் (1994), டேவிட் றீவ் (1994) மற்றும் எட்வார்ட் லுட்வக் 1999 ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட சமாதானப் பேணுகையை எடுத்துக்கொள்ளலாம்.

மறுபுறத்தே, மோதுகையின் அவலத்தைக் குறைக்கும் வகையில் அல்லது இல்லாதொழிக்கும் வகையில் அரசியல், இராணுவ மற்றும் மனிதநேய அம்சங்களை இணைத்துக் கடமைபுரியும் திறமைபடைத்த ஓர் அங்கமாக இன்னமும் எஞ்சியிருப்பது ஐ.நா. மட்டுமே என வாதிடுவோரும் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர். இந்த நிபுணர்கள் இடையீட்டு முறையிலான சமாதானம் பேணுகையின் செயலாற்றுகை மற்றும் எண்ணக்கருரீதியான குறைபாடுகளைத் திருத்துமுகமாக அதனை விருத்திசெய்து மறுசீரமைப்பதற்கான முயற்சிகளுக்கு அழைப்புவிடுக்கின்றனர். பொதுவாகக் கூறுமிடத்து, செய்ய வேண்டுமென இவ்வத்தியாயத்தில் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கையும் இதுதான். அத்துடன், சீரமைப்பதற்கான தெரிவுசெய்யப்பட்ட புதிய அபிவிருத்திகளும் புதிது புனையும் அணுகுமுறைகளும் மற்றும் ஆலோசனைகளும் அடுத்து வரும் பிரிவுகளில் ஆராயப்படும்.

பெட்டி 1 இல் காணப்படுவதுபோல், மிகச் சமீபத்திய பணித்திட்டங்களில் சிவில் மற்றும் சிவில் பொலிஸ் ஆக்க அம்சங்கள் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளதுடன், பிரயோகிக்கப்படும் இராணுவத்துருப்புகளின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கினை இப்போது கொண்டுள்ளன. அண்மைக்கால சமாதானப் பேணுகைப் பணித்திட்டங்களில் இராணுவப் பங்களிப்பு பெரும் எண்ணிக்கையில் வீழ்ச்சியடைந்து, ஈடுபடுத்தப்பட்ட சிவிலியன் மற்றும் சிவில்

பொலிஸ் ஆகியோரின் எண்ணிக்கையைவிடவும் ஒப்பீட்டளவில் குறைவடைந்து காணப்படும் அதேவேளை, சமாதானம் பேணுகை கோட்பாடானது, எதிர்காலத்தில் இராணுவச் அதிக ஆரோக்கியமுள்ள வகிபாகமாக இருப்பதை அனுமதிக்கும்வகையில் விருத்திசெய்யப்பட்டுள்ளது.

இதன் குறிக்கோள் யாதெனில், சிவிலியன்களைப் பாதுகாப்பதில் எந்தவொருதோல்வியும் (பொஸ்னியாவிலும் ருவாண்டாவிலும் நடந்ததுபோல்) ஏற்படாமல் தவிர்ப்பதுடன் சமாதானப் பேணுகைக்கான படையினரும் ஐ.நா. பணியாளர்களும் தங்களை காத்துக்கொள்வதற்கான தற்காப்பு நடைமுறைகள் போதுமானவையாக இருத்தலை உறுதிப்படுத்தலும் அவசியமாகும். (தொகுதியின் மக்கட்கும்பலாலும், குடிப்படைகளாலும் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சியரா லியோன் மற்றும் கிழக்குத் திமோர் நாட்டு நிலைமைகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடத்தைக் கருத்திலெடுத்து) சமாதானம் பேணுகைக் கோட்பாட்டில் ஏற்பட்ட நகர்வானது, 1990களில் பாரிய அளவிலான சமாதானப் பேணுகை செயற்பாடுகளில் பங்கேற்ற நாடுகளின் தேசிய பாதுகாப்பு கல்லூரி பிரதானமாகத் தோற்றுவிக்கப்பட்டதாகும். அத்துடன், அது, எந்த மோதுகைகளுக்கெனத் தம்மைப் போதிய அளவு தயார்நிலைப்படுத்தாமலும், ஆதரவளிக்கப்படாமலும் உள்ளனவோ அந்த மோதுகைகளுக்குள் தமது இராணுவப்படைகளை அந்நாடுகள் அனுப்புவதை இனிமேலும் அனுமதிக்கப்போவதில்லை. இப்புதுவகைச் சிந்தனையானது பிரித்தானிய சமாதானப் பேணுகைக் கோட்பாட்டில் நன்கு தெரியவருகிறது.

இப்புதிய வடிவிலான சமாதானப்பேணுகையைப் பிரித்தானிய இராணுவமானது 'சமாதான ஆதரவுச் செயற்பாடுகள்' (PSO) எனக்குறிப்பிடுகிறது. இச் சொற்பிரோயகமானது மோதுகைத் தடுப்பிலிருந்து சமாதானஉருவாக்கம்வரையிலான செயலுக்கு வரக்கூடிய ஒரு வீச்சான செயற்பாடுகளின் பரப்பெல்லையை உள்ளடக்குவதற்கும் மற்றும் பனிப்போருக்குப் பின்னரான புவிசார் உத்திக்கான சூழ்நிலைக்குப் பொருந்தும் கோட்பாடொன்றை வழங்குவதற்கும் பொதுவாகப் பயண்படுத்தப்படுகிறது. அதன் கோட்பாட்டாளருள் ஒருவரான வில்கின்சன் (2000) என்பார் கூறுவதுபோல், சிவில் யுத்தங்கள், வீழ்ச்சியடைந்த அரசுகள், சரிவடைந்த சர்வதேச மற்றும் மனிதநேய சட்டங்களினை மதித்தல் ஆகிய பண்புகள் நிறைந்து காணப்படும் ஓருலகில், சமாதானம் பேணல் பற்றிய பாரம்பரிய எண்ணப்போக்குகள் மலையேறிவிட்டனவாகையால், 1990களில் விருத்திசெய்யப்பட்ட சமாதானப் பேணல் பற்றிய பரந்த எண்ணக்கருக்கள் இற்றைப்படுத்தப்படவேண்டிய அவசியம் உருவாகியுள்ளது என்ற எடுகோளுடனேயே புதிய கோட்பாடு ஆரம்பிக்கின்றது.



உருவாகிவரும் சமாதானப் பேணுகை கோட்பாடுகளில் சமாதானத்தை வலிந்து நடைமுறைப்படுத்துவதானது குறிப்பிடத்தக்கவகையில் மீள வரையறுக்கப்பட்டுள்ளதுடன், தலையிடுகை முறை பற்றிய தெரிவுகளின் விரிவான கட்டுக்கோப்பினுள் அதற்கு ஒரு பாரிய இடமும் வழங்கப்பட்டுள்ளது. எனினும், விருப்பமும் சமாதான உருவாக்கமுமே (இராணுவ வெற்றியல்ல) இறுதி நோக்கங்களாகத் தொடர்ந்தும் இருக்கின்றன. சமாதான உருவாக்கமும், சமாதானத்தை வலிந்து நிலைநாட்டுதலும் நடுநிலைக்கோட்டின் "சரியான" பக்கத்தில் இருந்துகொண்டு செயலாற்றுகையில் , சமாதானத்தை வலிந்து நிலைநாட்டுவதற்கும், யுத்தத்திற்குமிடையேதான் முடிவைத் தீர்மானிக்கின்ற வேறுபாடு உள்ளது. இதன்படி, சமாதான உருவாக்கத்தின் நீண்டகாலக் கோரிக்கையின் பொருட்டு, விருப்பத்தைத் தக்கவைத்துக் கொள்ளல் அல்லது முன்பிருந்தவாறு பேணுதல் என்பதன் நோக்கத்தைச் சமாதானப் பேணுகையாளர்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள்.

சமாதானத்திற்கான ஆதரவின் சாரம் வரையறை செய்யப்படுவது நடுநிலையைப்பேணும் தேவையினாலேயேயொழிய, விருப்பத்தையே பேணும் தேவையினால் அல்ல. PSO கோட்பாட்டில், சமாதானப்பேணுகைச் செயற்பாடொன்றைப் பிரயோகிப்பதற்காக யுத்தத் தரப்பினர்களிடமிருந்து

பெறப்படும் விருப்பம் நிபந்தனையற்ற ஒரு தேவைப்பாடல்ல (பாதுகாப்பு அமைச்சு. 1999). புதிய கோட்பாட்டின் குறிக்கோள் யாதெனில், போதிய அளவு நெகிழ்ச்சித்தன்மை, நல் ஆரோக்கியம் மற்றும் யுத்தத் தயார்நிலை என்பவற்றைக் கொண்ட சமாதானப் பேணுகைச் செயற்பாடுகளை உருவாக்குவதே. இச்செயற்பாடுகள், சமாதான முறைவழிகளுக்குக் “கேடுவிளைவிப்போரால்”உள்ளூர் மக்களையும், பிராந்தியத்தில் இருக்கின்ற சர்வதேச சமூகத்தினருக்குப் பணிபுரியும் சர்வதேச பணியாள் தொகுதியினரையும் வன்செயல் மூலம், மிரட்டுதல்மூலம், அதச்சுறுத்தல்மூலம் பாதகம் விளைவிக்க எடுக்கும் முயற்சி உள்ளிட்ட பரவலான எதிர்கால நிகழ்வுகளைக் கையாளக்கூடியவையாக இருத்தல்வேண்டும் (வில்கின்சன் 2000). இவ்வெண்ணக்கருவானது, வட அத்திலாந்திக் உடன்படிக்கை அமைப்பு (NATO) உள்ளிட்ட சர்வதேச இராணுவ சமூகத்தினரின் பெரும்பாலான பகுதியினரால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது, நவீன சமாதானம் பேணுகைப் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கான கோட்பாட்டுரீதியான அடிப்படையாகவும் கொள்ளப்படுகிறது.

கொசோவோவில் ‘KFOR’ இன் ஈடுபடுத்துகையானது இம்மூலோபாயத்தின் ஒரு முன்கூட்டிய நேரகால உதாரணமாகும். நிச்சயமாக, 1999இல் கிழக்குத் திமோரில் சமாதானச்செயற்பாட்டை முன்டினடுத்துச் செல்வதற்காக அவுஸ்திரேலியப் படைகள் பயன்படுத்தப்பட்டமையும், 2000 கோடைக்காலத்தில் சியரா லியோனிலிருந்த ஐ.நா. படைகளைப் பலப்படுத்தும் பொருட்டு பிரித்தானிய படைகள் சென்றமையும் இதற்கான மேலும் சில உதாரணங்களாகும். இராணுவத்தின் வகிபாகம் நல் ஆரோக்கியமாய் இருக்கும் அதேவேளை, அது மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்கவேண்டுமென்பதை PSO கோட்பாடு ஏற்றுக்கொள்கிறது. சமாதானத்தை மீள ஏற்படுத்துவதற்காக மனிதநேய மற்றும் சிவில் அமைப்புக்கள் உள்ளிருந்து பணியாற்றக்கூடிய பாதுகாப்பான வாய்ப்பை உருவாக்கிப் பராமரித்தலே அதன் நோக்கமாகும்.

இந்த வளர்ச்சிகள் தேசிய மட்டத்தில் மட்டுமல்ல, ஆனால் ஐக்கிய நாடுகளுக்குள்ளேயே காணக்கூடியவாறுள்ளன. கடுமையான கண்டனங்களுக்கு மத்தியிலும், கொ∴பி அனான் அவர்கள், தன்னால் “சாதகமான தூண்டுதல்கள்” எனக்குறிப்பிடப்படுகின்ற புதிய திறமைகளை சமாதானம் பேணும் படைகள் விருத்திசெய்யவேண்டிய அவசியம் குறித்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். மோதுகை வலயங்களில் வாழும் மக்கள் மத்தியில் சமாதானப் பேணுகை ஆணைகளுக்காக அதிகரித்த ஆதரவைப் பெறும்பொருட்டே அவர் இதை வலியுறுத்தினர். சமாதானப் பேணுகைப்படைகளுக்கு இப்போது அதிகரித்த அளவிலான பலவந்தப்படுத்துகின்ற ஆற்றல் அவசியமெனவாதிடும் அதேவேளை, அக்கட்டாயப்படுத்தல்மீது தங்கியிருத்தல் மட்டும் போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார். பலவந்தப்படுத்தலின் பயன்வலு காலப்போக்கில் சிதைவடைந்து போவது மட்டுமல்லாமல், மோதுகைச் சூழநிலைகளிலுள்ள மக்களின் வாழ்க்கைச் செல்நெறியில் செல்வாக்கைச் செலுத்தும்பொருட்டு, வன்போக்கை விடுத்து மென்போக்கைக் கடைப்பிடிக்க முயற்சிப்பது கோட்பாட்டுரீதியில் எப்போதும் சிறந்தது என அவர் காரணங்கூறுகிறார்.



பலவந்தப்படுத்துவதென்பது தற்காலிகமாகவேனும் வன்முறையை மட்டுப்படுத்தக்கூடியதாய் இருக்கும் அதேவேளை அதனால் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவர இயலாது என அனான் வாதிடுகிறார். நீடித்த ஒரு சமாதானமும், நிலையான ஒரு தீர்வும் வன்செயல் நிறுத்தத்தை மட்டுமல்ல, “அடுத்த அடியை எடுத்து வைத்தலை” யும் அவசியப்படுத்துகின்றது. அனானைப் பொறுத்தவரையில் சமாதான ஊக்குவிப்புக்களை அல்லது தூண்டுதல்களை வழங்குதல் என்றே இது பொருள்கொள்ளப்படும்.

இன்னொருவகையில் கூறுவதானால், செய்பணி நடக்கும் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வெகுமதிகளைக் எதிர் பார்க்கத் தக்க முறையில் சமாதானம் பேணும் படைகள் பணியாற்ற வேண்டும். சமதானப் பேணுகைச் செயற்பாட்டின் எதிர்கால பயனுறுதிக்கு அவசியமானதாகக் காணப்படும் சமாதானப் பேணுகை பற்றிய இவ்வெண்ணக்கருவானது, சமாதானப் பேணுகையை மோதுகைத்தீர்வக்குள் திட்டவட்டமாகக் கொண்டுவருகிறது. (அனான் 1997- 27-28)

# 5. மோதுகை ஆய்வும், மோதுகை கட்டியெழுப்புகையும்

கோட்பாட்டுரீதியான ஆராய்ச்சிக்களங்கள் என்ற வகையில் ஐக்கிய நாடுகளின் சமாதானப் பேணுகை மற்றும் மோதுகைத்தீர்வு என்பன எண்ணக்கரு ரீதியாக அநேகவிடயங்களில் பொதுமையைக் கொண்டுள்ளதுடன், இரண்டுமே ஒரே காலகட்டத்தில் திட்டவட்டமான விடயங்களாக வெளிப்பட்டன. அண்மைக் காலங்களில் இவ்விரண்டு களங்களுக்குமிடையே கோட்பாட்டாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகிய இருதிறத்தாராலும் அதிகரித்த அளவில் தொடர் பாடல் உத்திகளையும் வழமையான இராணுவ பலத்தையும் பயன்படுத்தி வருவதால், மோதுகைத்தீர்வுக் கோட்பாட்டாளர்கள் சமாதானம் பேணுகையை சாதகமான மோதுகை மாற்றுநிலையாக்கத்திற்கான முக்கியமான ஒரு கருவியாகப் பார்ப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. அதே போன்று, மோதுகைத்தீர்வு குறித்து பல்வேறு விடயங்களின் பொருத்தப்பாடு பற்றிச் சமாதானப் பேணற் செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட உசாவல்களின் நிகழ்வுவீதம் (frequency) அதிகரித்துக் காணப்பட்டமையானது அண்மைக்காலப் பகுப்பாய்வுகளிலிருந்து காணக்கிடைக்கின்ற மிக முக்கிய அம்சங்களுள் ஒன்றாக இருக்கின்றது.

> *சமாதானப் பேணுகையானது பகைமைத்தன்மை கொண்ட வகிபாகத்திலிருந்து சமாதானத்தை ஆதரிக்கும் வகிபாகத்திற்குச் செல்கின்ற, போரை எதிர்கொள்ளும் நிலையிலிருந்து மூன்றாந்தரப்பின் இடையமர்த்துதலை நாடுகின்ற உளவியல் மாற்றத்துடன் ஈடுபாடுடையது. சமாதானப் பேணுகையில் எதிரி கிடையாது. பகைமைகளைக் களைதல், தரப்பினரிடையே தொடர்பாடல்களை முன்னேற்றுதல், மற்றும் இணக்கப்பாட்டுச் செயன்முறையை முன்னெடுத்துச்செல்லுதல் என்பனவே அதன் நோக்கங்கள். இது, மோதுகைக்கான அரசியல்ரீதியான, இராணுவரீதியான, மற்றும் பொருளாதார ரீதியான அத்துடன் சமூக மற்றும் கலாசாரச் சூழல் தொடர்பான காரணங்களின் முழுமையான ஒரு புரிந்துணர்வைத் தேவைப்படுத்துகின்றது, பெரும்பாலும் கடினமான மற்றும் ஆத்திரமூட்டக்கூடிய நிலைமைகளின்கீழ், பிரதான பாத்திரம் வகிப்பவர்களிடையே அவநம்பிக்கையும், சந்தேகமும் நிலவுகின்ற ஒரு சூழ்நிலையினுள் செயற்படுகையில் நீதி மனப்பான்மையும், நடுநிலைமையும் கொண்ட அணுகுமுறையொன்றை அது கோரிநிற்கிறது.*



மேற்சொன்னவாறாக இருப்பதனால் மட்டுமே, சமாதானம் பேணுதலுக்கான பயிற்சியானது வழமையான போர்ப்பயிற்சியின் இயல்பிலிருந்து கணிசமான அளவு வேறுபட்டதாக இருத்தல் வேண்டும் என்று கனேடியத் தளபதி கிளேட்டன் பீட்டி (1983, 209) வாதிடுகின்றார்.

சமாதானப் பேணுகையின் நோக்கங்கள் (வன்முறையைக் கட்டுப்படுத்தல் மற்றும் நிறுத்துதல், சுற்றாடலைப் பாதுகாத்தல் போன்று) இராணுவரீதியாகவும், (சட்டபூர்வமான அரசாங்கத்தை மீள்பதவியிலமர்த்தல் போன்று) அரசியல்ரீதியாகவும் (அபிவிருத்தி முயற்சிகளுக்கு உதவியளித்தல் போன்று) பொருளாதார ரீதியாகவும் இருந்தாலும், இந்த வாதத்தினை நாம் ஆதரிப்போம். இறுதியில், சாதாரன மக்களிடையிலான சமாதாப் பேணுகைச் செயற்பாடுகள் என்பன அடிப்படையில் ஓர் உளவியற்செயல்முறையே. உள்ளூர் புலனுணர்வு மற்றும் கலாசாரம் என்பவைமீதான உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை அது தேவைப்படுத்துகின்றது. ஏனெனில் சமாதானம் பேணுகையின் கோட்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் மூலமான டோதுகைத் தீர்வுடன் சாதாரணமாக இணைந்து காணப்படும் தொடர்பாடல் மற்றும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் உத்திகள் என்பவற்றின் நெருங்கிய ஒருங்கிணைவினால் மட்டுமே சமாதானம் பேணுதலின் மூலக்கோட்பாடுகள் அனுசரிக்கப்படமுடியும் (காண்க பிரிவு 2).

பிரித்தானியப் படையினர் மேற்கொண்டுள்ள சமாதானப் பேணுகைக் கோட்பாடானது எந்தளவுக்கு சமாதானப் பேணுகையின் பரந்துபட்ட அம்சங்களுடன் இயைந்துள்ளது என்பது நோக்கப்பட வேண்டியது. (பிரித்தானிய இராணுவம் 1994). இதே அணுகுமுறை PSO வினுள் இடம்பெறும் அமெரிக்கக் கோட்பாட்டிலும் நோக்கப்படும். இங்கு இணக்கம் முகாமை செய்யப்படும் முறைமையானது நடுநிலை, சட்டபூர்வநிலை, பரஸ்பர மதிப்பு, குறைந்தப்பட்ச பலப்பிரயோகம், நம்பகத்தன்மை மற்றும் கணக்குக் காட்டும் பொறுப்பு ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், பல்வேறுவகையான மோதுகைத் தீர்வு உத்திகளுடன் தொடர்புடையதாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, ‘இதயங்களையும் உள்ளங்களையும்’ வென்றெடுப்பதற்கான மூலவளங்களைக் கொண்டுள்ள துடிப்பான ஒரு சிவில் விவகார நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, சிறந்த பேரம்பேசல் மற்றும் இணக்குவித்தல் மற்றும் சமூக உறவுகளுக்கான சாதகமான அணுகுமுறைகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கான உத்திகளை இவை உள்ளடக்குகின்றன. இணக்கத்தை முன்னேற்றும் இவ்வுத்திகள் வன்மையான அல்லது தொழில்நுட்பரீதியான மற்றும் இராணுவரீதியான திறன்களுக்கு எதிராக, மென்மையான திறன்களை மற்றும் சமாதானப் பேணுகையின் செயல்முறைகளைத் தம் ஆக்கக்கூறுகளாகக் கொண்டுள்ளன.

சமாதானப் பேணுகையாளர்கள், வதந்திகள், நிச்சயமற்றநிலைகள் மற்றும் முற்சாய்வுகொண்ட எண்ணப் போக்குகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும்வகையிலும், நம்பிக்கை மற்றும் திடநிலையின் சூழலை வளர்த்து, சமாதானப் பேணுகையாளர்களின் வகிபாகம் மற்றும் சமாதானச்செயல்முறையின் தன்மை என்பவை தொடர்பில் மேலும் சாதகமான புலப்பதிவை ஏற்படுத்தும் வகையிலும் செம்மையானதொரு தகவல் தளத்தினை வழங்கும் பொருட்டு இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றன.



சமாதானப் பேணுகையைக் கடைப்பிடிப்பதோடு குறிப்பிட்ட பொருத்தப்பாட்டைக்கொண்டுள்ள மோதுகைத் தீர்வின் பத்து விடயப் பரப்புக்கள் இவ்வதிகாரத்தின் பிறிதோரிடத்தில் இனங்காணப்பட்டுள்ளன. (ரம்ஸ்பொதாம், வுட் ஹவுஸ் 1996) இவற்றுள், சமாதானம் பேணுகை மற்றும் மனிதநேய தலையீடு என்பவற்றின் நடைமுறையில் இருக்கக்கூடிய மிகப்பிந்திய வளர்ச்சிகளோடு மிகவும் நெருங்கிய உறவுடைய மூன்று விடயங்களைப்பற்றி நாம் விரிவாகப் பார்ப்போம்.

## 5.1 மோதுகைப் பகுப்பாய்வும் மனிதநேய தலையீடுகளும்

இனக்குழும மற்றும் இனங்களுக்கிடையிலான ஏளைய மோதுகைகளின் மூலகாரணங்கள் மற்றும் இயக்கவியல் ஆகியவற்றின் மிக முந்தியதும், மிகவும் பொருத்தப்பாடுடையதுமான பகுப்பாய்வினை மோதுகைத் தீர்வுக் கோட்பாடு வழங்கியுள்ளது. இப்பகுப்பாய்வுரீதியான பங்களிப்பானது, நீண்டகாலம் நிலவிவரும் நீடித்த சமூக மோதுகை (PSC) மற்றும் சர்வதேச சமூக மோதுகை (ISC) ஆகியவற்றின் கோட்பாட்டுரீதியான மாதிரிகளால் நன்கு உதாரணப்படுத்தப்படுகிறது. பனிப்போர் முடிவுற்ற காலத்திற்கு பின்னர் எட்வேட் அசார் (1990) மற்றும் ஏனையோரின் பணிகளை அடியொற்றி சமாதானப் பேணுகையாளர்கள் ஈடுபட்டுவந்த பல்வேறு வகையான மோதுகைகளின் வெளிப்பாடுகள் மற்றும் அவற்றின் நிலைநிற்றல்கள் என்பவற்றை விவரிக்க விழையும் மாதிரியமொன்றை நாம் முன்வைத்துள்ளோம். நாம் முன்வைத்துள்ள இம்மாதிரியமானது, பொதுவாக சர்வதேச உறவுகளிலே பின்பற்றப்படாத அணுகுமுறையொன்றை எடுகத்துக் காட்டப்படுகின்றது. (பகிரப்பட்ட இன, மத, மொழி அல்லது கலாசாரப்பண்புகளால் வரையறுக்கப்பட்ட) இனவாதக்குழுக்களின் தெளிவான அடையாளம் அல்லது அவர்களது கூட்டுமொத்த அபிவிருத்தித் தேவைகளின் நிறைவேற்றம் என்பன மறுக்கப்படும்போதுதான் நீடித்த சமூக மோதுகை தோற்றம் கொள்கின்றது என்பதை நாம் அவதானிக்கின்றோம்.

அசார் தரும் மாதிரியமானது நீடித்த சமூக மோதுகைகளுக்கான நான்கு தெளிவான சுட்டிகளை முன்வைக்கிறது:

- சமுதாய உள்ளடக்கம்: வேறுபடும் சமுதாயங்கள் பலவற்றை தன்னுள்ளே கொண்டுள்ள சமூகங்களிலே PSC களுக்கான தொடக்கப்புள்ளியை வழங்குகின்றன.
- மனிதத் தேவைகள்: இதனால் கருதப்படுவது யாதெனில், (சமுதாயத்தின் குறிப்பிடத்தக்க நிறுவனங்களில் பங்கேற்றல் போன்ற) வழிவாய்ப்புத் தேவைகள் மறுக்கப்படுதல், (பகிரப்பட்ட கலாசார விழுமியங்கள் மற்றும் பாரம்பரியம் என்பவற்றால் வரையறுக்கப்பட்ட அடையாளத்தின் (அங்கீகாரம் போன்ற) ஏற்கப்படுவதற்கான தேவைகள் மறுக்கப்படல் மற்றும் (பௌதீக நலன்சார்) பாதுகாப்புத் தேவைகள் மறுக்கப்படல் போன்றவைகள் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் வெடிப்புக் கோடுகளைத் திறந்துவிடுகின்றன.

ஆட்சிமுறை: கூட்டுமொத்த நன்மைகளை வழங்குதல் அல்லது மறுத்தல் என்பது பிரதானமாக அரசின் வகிபாகம் மற்றும் அதன் பண்பு என்பவற்றின்மீதே தங்கியுள்ளது. பொதுவாக, நீடித்த சமூகமோதுகையை அனுபவிக்கின்ற அல்லது அதற்கு உள்ளாகக்கூடிய அரசுகள் முழுச்சமூகத்தினதும் அடிப்படைத்தேவைகளைத் திருப்திப்படுத்தத் தவறுகின்ற அரசுகள் திறமையற்ற, குறுகிய நோக்கங்கொண்ட, உடைந்துபோகக்கூடிய ஆட்சியாதிக்கக் கொள்கையுடைய அரசாங்கங்களையே கொண்டிருக்கும்.(அசார் 1990-19).

சர்வதேச தொடர்பிணைப்பு: பல்சமூக சமுதாயமொன்றில் மோதுகையொன்று வெடித்ததும், பலவீனமான, விட்டுக்கொடுக்காத மற்றும் கட்சி சார்ந்த அரசுகள், உள்ளூர் மோதுகைச் செயற்பாட்டாளர்களுக்கு வெளியிலிருந்து கிடைக்கும் உதவிகளைத் துண்டிப்பதன்மூலமும், தமக்கு வெளியிலிருந்து உதவிகளை தேடிக்கொள்வதன்மூலமும் அச்சமுதாயத்தைத் தமது அதிகாரத்தினுள் கொண்டுவர விழைவர். இதன்விளைவாக, மோதுகையின் செயற்பரப்பும், தீவிரமும் மேலும் பெரிதாகிச் சர்வதேச மயப்படுத்தப்படும். அசாரின் சொற்பிரயோகத்தை அடியொற்றியதாக, இம்மோதுகை மட்டத்தை நாம் சர்வதேச சமூக மோதுகையெனக் குறிப்பிட்டுள்ளோம். ஒரு சர்வதேச சமூக மோதுகையென்பது, அது (பொஸ்னியா போன்று) அரசினால் உருவாக்கப்பட்ட ஒரு மோதுகை வடிவத்தை எடுத்தாலென்ன, அல்லது (ருவாண்டா போன்று) நாளடவில் அரசினை வீழ்த்துகின்ற ஒரு வடிவத்தை எடுத்தாலென்ன, (அல்லது கொஸோவோ போன்று) தேசிய அடையாளத்தால் பிரிந்து செல்கின்ற மோதுகை வடிவத்தை எடுத்தாலென்ன, அது அரசிற்கு ஒரு நெருக்கடி நிலையாகும்.



இக்குறிப்பிட்ட வகையான மோதுகைகளின் மூலவேர்கள் மற்றும் இயக்கவியல் என்பனவற்றை நன்கு புரிந்து கொள்வதற்கு அசாரின் திட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய அணுகுமுறைகள் மற்றும் மாதிரிகள் என்பன மிகவும் உதவியாக இருப்பதால், அவை முக்கியமானவையாக விளங்குகின்றன. ஏன் இமமோதுகைகள் பலவும் அடிக்கடி மூன்றாந்தரப்பு இடையீடொன்றை வரவழைக்கின்றன என்பதை அறியும்பொருட்டும், வேறுவழியின்றி ஐ.நா. சமாதானப் பேணுகையாளர்களுக்கு அவை முன்வைக்கும் சவால்கள் பற்றி உணரும் பொருட்டும் ISC இன் பண்பினை அறிந்து கொள்வது அவசியம் என்பது எமது முக்கிய வாதங்களுள் ஒன்றாகும்.

மேலும், மோதுகைத் தீர்வுக் கொள்கை புலப்பதிவில், மோதுகைப் பகுப்பாய்வு செய்வது சர்வதேச சமூகத்திற்கான பயனுள்ள ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. சர்வதேச தலையீட்டுக்கென பொருத்தமான கொள்கைகளை வகுத்து, அவற்றை விருத்தி செய்வதிலும், சிவில் யுத்தங்களால் பாதிப்படைந்த சமூகங்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் இச் கட்டமைப்பானது அறிவுரை தரக்கூடியதாக இருக்க முடியும். 1999இல் கொசோவோவில் சேர்பியாவுக்கெதிராக நேட்டோ

மேற்கொண்ட தலையீட்டிலிருந்து கற்றுக்கொண்ட படிப்பினைகளை மீளாய்வுசெய்த ஜேன் ஷார்ப் (2000) பின்வரும் விடயத்தினை அவதானித்திருக்கிறார். பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் அவர்கள்,நேட்டோவினால் மனிதாபிமான நோக்கில் கொசோவோவில் மேற்கொண்ட தலையீட்டில் கொசோவோ அல்பேனியர்கள் சார்பாக முன்வைப்பதையே விரும்பினார். ஆயினும், கிழக்குத் திமோர் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கென அதேபோன்ற செயற்பாட்டைப் பரிசீலிக்கையில், பிரித்தானியா, பாதுகாப்புச் சபையின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் தலையீடொன்றை மேற்கொள்வதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

மனிதநேய தலையீட்னை பிரயோகிக்கவேண்டுமென்பதில் உலக சமூகமானது சிரத்தையாக இருப்பின், இவ்விடயம் தொடர்பாக சர்வதேச சட்டத்தைத் தெளிவுபடுத்துவது மாத்திரம் அல்லாமல் இந்த சட்டத்தை சர்வதேச நாடுகளிடம் பரப்புதலும் அவசியமாகும் (அதே நூல், 78). இன்றைய நிலையில் சர்வதேச சமூகத்திற்கு முக்கியமானது யாவையெனில், மனிதநேய தலையீட்டில் தமது வகிபாகம் என்ன, தமது வல்லமை என்ன என்பவற்றை முதலில் கவனமாக மீளாய்வு செய்ய வேண்டிய தேவை, இச்செயற்பாட்டை வழிநடத்திச் செல்லும் கோட்பாடுகள் மற்றும் நியமங்கள் பற்றிய தெளிவான அறிவு, மற்றும் இடையீடுசெய்யும் தன் வல்லமையை யதார்த்தபூர்வமாக மதிப்பிடுதல் ஆகியவைவே சர்வதேச சமூகத்திற்குத் தற்போதுள்ள தேவை ஆகும். இறுதியாகச் சொல்லப்பட்ட விடயத்தைப் பொறுத்தவரையில், சமாதானத்தைப் பேணும் பாத்திரமானது மிக முக்கியத்துவம் பெறுகிறது. அத்துடன், சமாதானப் பேணுகை மற்றும் மோதுகைத் தீர்வு ஆகிய இரண்டுக்குமிடையேயான தொடர்புபற்றிய அவதானிப்புகளும் அதிமுக்கிய இடத்தைப் பிடிக்கின்றன.

## 5.2 வன்மையைக் கட்டுப்படுத்தலும் மோதுகைத் தீர்வும்



மோதுகைத்தீர்வுக் கொள்கையானது, வன்முறை மோதுகை முகாமையில் உள்ள வெவ்வேறு காலச்சட்டகங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டினை அறிவதன் முக்கியத்துவத்திற்கு நம் கவனத்தை ஈர்க்கின்றது. சமாதானப் பேணுகையின் முக்கிய தாற்பரியமாகக் காணப்படுவது யாதெனில், இச்செயற்பாடானது ஒருபுறத்தில் குறுகியகால மோதுகைத்தீர்வு, மறுபுறத்தில் நீண்டகால மோதுகைத்தீர்வு என இரட்டைக் குறிக்கோளைக் கொண்டது என்பதை இதன் செயற்பாட்டாளர்கள் எப்போதும் சிந்தனையில் கொண்டிருப்பதாகும். இப்பகுப்பாய்வில் இரண்டு அடிப்படைப்பிரச்சினைகள் குறித்து ஒரே சமயத்தில் உரிய கவனஞ்செலுத்தப்பட வேண்டும் என உணரப்பட்டுள்ளது. முதலாவது, (குறுகியகால நோக்கில் பிரதானமாக இராணுவ வகிபாகமாக விளங்கும்) பயனுறுதியான வன்முறைக் கட்டுப்பாடு, இரண்டாவது, நீண்டகால அடிப்படையில் நீடித்த சமாதான உருவாக்கத்தை முன்னெடுக்கும் பொருட்டு, சமூகங்களுக்குள்ளும், சமூகங்களுக்கிடையேயும் கூட்டுச்செயற்பாட்டு ரீதியிலான உறவுகளை மீளக்கட்டியெழுப்பல். மேற்சொன்னவகையில் தனித்தனி அரசுகளாலும், ஐ.நா. வாலும் வெளியிடப்பட்ட அண்மைக்கால சமாதானக் கோட்பாடானது, அரசியல் மற்றும் சிவில் சமாதான உருவாக்கச் செயற்பாடுகளை முன்னேற்றப்பாடுபடும் அதேவேளை, வன்முறைக்குத் தக்க பதிற்செயற்பாடு புரியும் ஆற்றல் வாய்ந்த ஆரோக்கியத்தன்மை கொண்ட சமாதானம் பேணுகையொன்றை வேண்டிநிற்கின்றது.

இப்புதிய சமாதானம் பேணுகைக் கோட்பாட்டில் பின்பற்றப்பட்ட எண்ணக்கருவிலிருந்து புலனாவது யாதெனில், சமாதானம் பேணுகையானது இரு பரிமாணங்களைக் கொண்ட செயற்பாட்டைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதாகும். அதில் ஒன்று யுத்தத்துக்கு அண்மித்த நிலைமைக்கு கொண்டுவந்து சேர்க்கும். (அதாவது, சமாதானப் பேணுகையாளர்கள் யுத்தம் புரிய எப்போதும் தயாராயிருப்பதுடன் ஒருவிடயத்தை வலிந்து ஏற்கச் செய்யும் திறனையும் கொண்டிருத்தல் வேண்டும்). இருப்பினும், அதேநேரத்தில், கீழ்ப்படிதலை வலிந்து திணிக்கும் தேவைப்பாட்டினை மட்டுப்படுத்தும் வகையில், இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்பும் ஆற்றல் கொண்டதாகவும் அது விளங்கவேண்டுமென்று

நடுநிலைக் கோட்பாடு விதந்துரைக்கின்றது. இந்நிலை ஏற்படாவிடில், சமாதானப் பேணுகையாளர்கள் நீடித்த இராணுவத்திணிப்பு வகிபாகம் ஏற்கும் நிலைக்குள் இழுக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும். ஆயினும், அதேவேளையில் நடுநிலைக் கோட்பாடு அது சம்பந்தமாக கட்டியெழுப்பும் இயலுமையையும் கொண்டிருத்தல் வேண்டுமென்றும்,இதனால் இணங்கியொழுகுதல் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறாக, "மொகடிஷு கோட்டைத் தாண்டும்" நிலை அதிகரித்துச் செல்லும், அதாவது பக்கச் சார்பாக நடப்பதும், நேரடியாக மோதுகைக்குள் இழுக்கப்படும் நிலையும் அதிகரிக்கும். மோதுகைத்தீர்வுக் குறிக்கோள்கள் மற்றும் மோதுகையின் பின்னரான சமாதான உருவாக்கம் என்பவற்றின்மீது கவனக்குவிப்புச்செய்தவாறு செயற்பாட்டாளர்கள் சமாதானப்பேணுகையின் இணக்க மேம்பாட்டுப் பரிமாணத்தில் தீவிரமாகச் செயற்படாவிடில், இப்புதிய கோட்டின்கீழ், முழு அளவிலான யுத்தத்தினுள் சிக்கிக்கொள்ளும் அபாயத்தை எதிர்கொள்ளும் இடருக்காளாவர்.

பிரித்தானிய மற்றும் அமெரிக்க சமாதானம் பேணுகைக் கோட்பாடுகள் சமாதானம் பேணுகையில் கைக் கொள்ளப்பட வேண்டிய இணக்க மேம்பாட்டு உத்திகளின் முக்கியத்துவத்தைத் திட்டவட்டமாக அங்கீகரிக்கின்றன. இவ்வுத்திகள், PSO களில் சாதகமான தூண்டுதல்களைக் கட்டியெழுப்பிப் பலப்படுத்துவதற்காக கொபி அனான் முன்வைக்கின்ற கொள்கைகளை ஒத்திருக்கின்றன. PSO கோட்பாட்டில் காணப்படும் இணக்க மேம்பாட்டு உத்திகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன. சமூகத் தகவல், ஊடகச் செயற்பாடுகள், சிவில் விவகாரங்கள், பேச்சுவார்த்தை மற்றும் இணக்குவிப்பு என்பன PSO ஒன்றின் அனைத்து வெவ்வேறு கட்டங்களிலும், மட்டங்களிலும் இருக்கவேண்டிய அத்தியாவசிய ஆற்றல்களாக நோக்கப்படுகின்றன. இது படையணியினர் நிலையில் சிரேஸ்ட தளபதிகள் முதல் சாதரண சிப்பாய்கள் வரை பாதுகாப்பை உறுதிபடுத்திக்கொள்வதற்கும், சம்பவமொன்றைக் கட்டுப்படுத்தப் பணியாற்றுகின்ற அல்லது பிணக்கு ஒன்றைத் தீர்க்கவும் செய்கின்ற தொலை இடங்களில் உள்ள அவதானிப்புமையங்களில் பணியாற்றும் படையினரைச் சந்திக்கும் முதுநிலைக் கட்டளைத் தளபதிகளான சேவையாளர்களை அவை ஈடுபடுத்துவனவாக இருக்கலாம்.



பரந்த ஒரு மட்டத்திலிருந்துகொண்டு PSO வின் நோக்கங்களை மோதுகைத்தீர்வின் குறிக்கோள்களுடன் விமர்சனக்கண்ணோட்டத்துடன் இணைத்துப்பார்க்கையில், இக்கோட்பாடானது மோதுகைத் தரப்பினர்க்குச் சந்தர்ப்பங்களை வழங்குவதன்மூலம் அவர்கள் ஒன்றுபட்டுழைத்துச் சமாதான செயல்முறையில் அவர்களைப் பாத்தியதை உடையோராக நிலைமாற்றம் செய்யும் நோக்கத்தையும், ஊக்குவிப்புகள், வெகுமானங்கள், மற்றும் தடையாணைகள் என்பவற்றை தோற்றுவித்தல் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது. PSO வின் இப்பரந்த எண்ணக்கருவானது சமாதானப் பேணுகை பணித்திட்டங்களில், நீலத்தலைக்கவசங்கொண்ட இராணுவப் படையினரின் ஈடுபாட்டைச் சமநிலைப்படுத்திக் குறைநிரப்புச் செய்வதற்காக "வெள்ளைத்தலைக்கவசங் கொண்டவர்கள்" உள்ளிட்ட சிவில் ஆளணியினரின் பயன்பாடு அதிகரிப்பதற்கு வழியமைக்கலாம். இதன் பின்னர் சமாதானப் பேணுகையென்பது மேலும் சிக்கலாகும். அவ்வாறு ஏற்படுவதற்கு காரணம் சிவில் மற்றும் இராணுவக்கூறுகளை ஒருங்கிணைப்பதிலுள்ள சிரமமேயாகும். இவ்வளர்ச்சிகளின் உள்ளர்த்தங்கள் காரணமாக ஏற்படும் பயிற்சிகள் மற்றும் திறன்கள் பற்றி அடுத்த பிரிவில் ஆராயப்படும்.

## 5.3 சமாதானத்தைக் கொண்டுநடத்துகையும் மோதுகைத் தீர்வுத் திறன்களும் அவற்றுக்கான பயிற்றுகையும்

சமாதானப் பேணுகையென்பது பிரதானமாக தேசிய நிலைப்பட்டதே என்று கொள்கின்ற அரசியல் நிலைப்பாட்டுக்கு மேல் சமாதானப் பேணுகையானது சம்பந்தப்பட்ட நாட்டின் பண்பாட்டு நிலையிலும் சமுதாய ஒருங்கிணை நிலையிலும் வைத்துப் பார்க்கப்பட வேண்டும் என்பது மோதுகைத் தீர்வு பகுப்பாய்வின் ஒரு மைய அணுகுமுறையாகும். அதாவது ,இந்த விடயமானது ஒரு புறத்தில் பேச்சவார்த்தைகள், தரகுப்

பேரம் ஆகியனவற்றின் மூலம் அரசியல் தளத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ள தீர்வுக்கும் பண்பாட்டு சமுதாய ஒருங்கிணைப்பு நிலையில் அவற்றை அமுல்படுத்துகின்ற இரண்டு காரியங்களுக்குமிடையே நின்று தொழிற்படுவோருக்கு இந்நடைமுறை பெரிதும் இயைபுடைய ஒன்றாக அமையும்.

பெட்டி 2 இல் காணக்கூடியதாக இருக்கின்றவாறு, சமாதானப் பேணுகையாளர்களால் சமூகமட்டத்தில் நிறைவேற்றப்படுகின்ற பணிகளில் பல உள்ளூர் மக்களுடனான நெருங்கிய ஊடாட்டங்கள் தேவைப்படுத்துகின்றன. எனவே, வன்முறை மோதுகையின்போதான நடத்தைகுறித்த சமூக உளவியல் முறைவழிகளின் தாக்கங்கள் மற்றும் பிளவுபட்ட சமூகங்கள் தம் உறவுகளை மீளக்கட்டியெழுப்புவதை இயலுமானதாக்கும் முறைவழிகள் மற்றும் ஆற்றல்கள் என்பவைபற்றிச் சிறிது புரிந்துணர்வை விருத்தி செய்துகொள்வது அவசியமாகின்றது. சுருங்கக்கூறின், மோதுகையைத் தீர்த்துவைக்கும் ஆற்றல்களின் குறித்த செயல் எல்லைக்குள் அவை முழுத்தேர்ச்சியடையவேண்டியதாக இருக்கும்.

அத்துடன் சமீபத்திய பணித்திட்டங்களில் பெற்ற அனுபவமானது, சமாதானப்பேணுகைப் படைகள் மிகப் பெரிதாகவுள்ள தமது பரந்த பல்தேசிய அமைவாக்கத்தின் காரணமாகத் தமக்கிடையேயான தொடர்பாடலில் பாரிய சிரமங்களை அடிக்கடி எதிர்கொள்வதை வெளிப்படுத்தியுள்ளன. எந்த சமூகங்களிடையே சமாதானப் பேணுகையில் படையணியினர் உள்ளனரோ, அச்சமூகங்களின் விழுமியங்கள் குறித்து அவை அவதானமாய் இருப்பது எந்தளவு அவசியமோ அதுபோல் படையணிக்குள் இருப்பவர்கள் தமக்குள் ஒருவர் மற்றொருவருடன் எவ்வாறு தொடர்புறுவது என்பதுபற்றிய விழிப்புணர்வுடன் இருப்பதுவும் அவசியமாகும்.

யுத்தம் புரிவதற்கான திறன்கள் மற்றும் சமாதானம் பேணுகைச் செயற்பாட்டுக்கான திறன்கள் என்பவற்றுக்கிடையே வளர்ந்து வரும் வேறுபாட்டினை ஒருவர் சிந்திக்கையில், மோதுகைத் தீர்வுக்கான ஆற்றல்களைக் கூட்டிணைக்கின்ற தனிப்பட்ட சமாதானம் பேணுகைப் பயிற்சிக்கான தேவை மேலும் அதிகரிக்கின்றது (காண்க பெட்டி 3). அமெரிக்க இராணுவச் சிந்தனையின்படி, யுத்த செயற்பாடுகள் சிவில்யன்களுடன் என்றுமே மாற்றத்திற்கு உட்படாத எந்தவொரு வடிவத்திலுமான ஊடாட்டத்தை மிக அரிதாகக் கொண்டிருக்கையில், PSO வில் இராணுவமானது பகைமைக் கும்பலைக் கட்டுப்படுத்துவதற்கும், மனிதநேய நிவாரணப்பொருட்களை சிவில் மக்களுக்கு விநியோகிப்பதற்கும் சமாதான உடன்படிக்கையென்றின் பொது நிபந்தனைகளின்கீழ் உள்ளூர்க்குடிமக்கள் படைகளின் ஆயுதங்களைக் களைவதற்குமான தேவைகளைக் கொண்டிருக்கலாம். இப்பணிகளை ஆற்றுவதற்கு உள்ளூர் யதார்த்தங்கள்குறித்த ஓர் ஆழமான விளக்கமும் சிவிலியன் மக்கட் தொகையிருடன் சிறந்த உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதும் அவசியமாகும். மேலும் அவை (வெளிக்களத்தில்) தந்திரோபாய மட்டத்தில் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கும், தங்களது படையினரை பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்குமான பேச்சுவார்த்தைத் திறன்களை யுக்திபூர்வமாக கையாளும் திறமையிலேயே இத்திறன் தங்கியுள்ளது. இத்தகைய பேச்சுவார்த்தைகள் படைக்கட்டளைத் தளபதிகளால் அல்லது சிரேஷ்ட பெரும்படைப்பிரிவு பதவிநிலை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படக்கூடியவையாகும். பொதுமக்கள் மத்தியில் போர்வீரர்கள் தமது வழமையான கடமைகளின்போது ஒரு முழுவீச்சான உள்ளூர்ப்பிணக்குகளில் இணக்குவிப்பாளராக அல்லது நடுத்தீர்ப்பு சொல்வோராகப் பணியாற்றுவதற்கு அழைக்கப்படக்கூடும். சமாதானத்தைக் கட்டியெழுப்புவதன் தொடர்பாடல் அம்சங்களை நோக்கிய இத்தகைய செயற்பாடானது மரபுரீதியான இராணுவ ஆளணியினருக்கு இயற்கையாகவே வரக்கூடிய ஒன்றல்ல. இது ஏற்படுவதற்கு பாரம்பரிய இராணுவ கலாசாரத்தில் கணிசமான மாற்றங்கள் அவசியமாகும். அதற்கு இராணுவத்தை நவீனகால சமாதானத்தைப் பேணும் மேலும் பொருத்தமான ஒரு கலாசாரத்தை அல்லது உளவியலை நோக்கி நகர்த்துவது அவசியமாகும்.

கலாசாரங்களுக்கிடையிலான, ஆகவே நடைமுறைகளுக்கிடையிலான வேறுபாடு மிகவும் பாரிய ஒன்றாகும். மரபுரீதியான இராணுவ சிந்தனையில் போரிடும் படையினருக்கு எதிராளிகளான ஆயுதந்தரித்தோருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவற்கு கற்பிக்கபடுவதில்லை. மாறாக, அவர்களை

அழிப்பதற்கே அவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. இதுகுறித்த தீவிரம் குறைந்த ஓர் உதாரணம் போர்க்காலத்திலும், சமாதானத்தைக் காப்பதிலும் பொதுவாக இடம்பெறும் கிரமமான பணியாகிய ஒரு சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை நிகழும் சூழமைவு முறையில் நன்கு விளக்கப்படுகின்றது. போர் நடவடிக்கைகளின்போது ஒரு கட்டத்தில் கதவைத் திறக்கும் செந்தரமான நடைமுறை அதை வெடிக்கவைத்து திறப்பதாகும். சமாதானத்தைக் காக்கும் படையினர் உள்ளிருப்போருடன் பேசி நம்பவைத்து அவர்களை கதவைத்திறக்க வைக்கும் மேலும் கடினமான நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் இதே பணியை இப்பொழுது நிறைவேற்றுதல் வேண்டும் (சாயில்ஸ் மற்றும் ராச் 1995).

இந்தத்தேவைகளின் தொடர்பில் சமகால மோதுகைத்தீர்வுக் கோட்பாடு செயற்பாட்டாளர்களுக்கு, மேலும் சிறந்த ஊடாட்டம் மற்றும் இணக்கப் பேச்சுவார்த்தைகளுக்கு தேவைப்படும் தொடர்பாடல் திறன்களையும், எண்ணக்கருக்களையும் பெற்றுக்கொள்ளஉதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், நுட்பங்களையும் இனங்கண்டு அபிவிருத்திகளை ஏற்படுத்தியுள்ளன. சமகாலத்தில் சமாதானத்தைக் காக்கும் பணியில் ஈடுபட்டோர் இப்புதிய சவால்களை ஏற்றுக்கொள்ள அவசியமான திறன்களைப் பெற்றுக்கொள்ள உதவும்வகையில், பல தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இப்பொழுது வடிவமைக்கப்பட்டுவருகின்றன. ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு, பரிசோதிக்கப்பட்டவையான பெருமளவிலான இயைபுள்ள மோதுகைதீர்வுத் துறைத்தேர்ச்சி இப்பொழுது உள்ளது. எப்படியாயினும், இவை இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலும் தகவல் வழங்கக்கூடிய ஏனைய சூழமைவுகளிலேயே உள்ளது.



**பெட்டி 3 : இராணுவ நடவடிக்கைகளும் சமாதானத்தைக் காத்தலும்: நடத்தைகளில் இருக்க வேண்டிய வித்தியாசமும், தேவையான திறன்களும்**

| மரபுரீதியான இராணுவ நடத்தை | சமாதானத்தைக் காத்தல் ∴ மோதுகைத்தீர்வு |
|---|---|
| சிவில் மக்களுடன் தொடர்பு இல்லாமல் போதல் | சிவில் மக்களுடன் மிக அந்யோன்யமாக செயற்படல் (எல்லா சனங்களையும் ஆட்சி செய்தல், சிவில் மக்களுக்கிடையில் மனிதநேய நிவாரணத்தை பகிர்ந்தளித்தல், பிரதேசத்தில் இராணுவத்தின் ஆயுதங்களை கலைதல் போன்றவை) சிவல் நடவடிக்கைபிரிவுடன் ஒத்துழைப்பு |
| அடிப்படைஇராணுவ தந்திரங்களை ஈடுபடுத்தல் (தொடர்பு திறன்) | கலந்துரையாடலை அடிப்படையாகக்கொண்ட திறன்களை ஏற்படுத்தல் (தொடர்பு திறன்) எதிரணி ஆயுத பிரிவுடன் கலந்துரையாடுதல் |
| எதிரணி ஆயுதக்குழுக்களை அழித்தல் | சாந்தமான பாங்கு |
| விரோத பாங்கு இனங்காணப்பட்ட எதிரிகளிருத்தல் | எதிரியாக இனங்காணுபவர்கள் இல்லாதிருப்பது : பக்கச்சார்பற்ற நடவடிக்கை |
| இறுதி இலக்கு: இராணுவ வெற்றி | இறுதி இலக்கு : மோதுகைக்கு காரணமாயிருந்த விடயத்தை தீர்த்தல் |
| அதிகாரத்தை பாவித்து | ஏற்றுக்கொள்ளப்பட்டவையை அடிப்படையாக |

## 6. கற்றுக்கொண்ட படிப்பினைகளும் பிரயோகங்களும்

சமாதானத்தைக் காக்கும் நடைமுறையினுள் மோதுகைத்தீர்வை ஒன்றிணைக்கும் அணுகுமுறைகள் இதுவரை ஓரளவுக்கு முறைமையற்றதாகவும், ஆரம்பநிலையிலுள்ளதாகவுமே உள்ளன. இந்த நுண்ணறிவுகளின் முக்கியத்துவம் ஏற்கெனவே மிகப் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் இதுவே நிலைமையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத்தைப் பேணும் நடவடிக்கைகளுக்கான திணைக்களம்(ஐக்கிய நாடுகள் 2000B ) எந்தவிதமான வெற்றிகரமான சமாதானத்தைப் பேணும் நடவடிக்கைகளுக்கும் உள்ளூர் மக்களின் ஆதரவு ஓர் இன்றியமையாத முன் நிபந்தனையாகும் என்பதை இனங்கண்டுள்ளது. அது அரசியல்வாதிகளோடு மற்றும் தலைவர்களோடு மாத்திரம் அன்றி, மோதுகைப் பிரதேசத்தில் உள்ள முழுச் சமுதாயத்துடன் சிறப்பான உறவுகளைக் கட்டியெழுப்பும் பரிமாணத்தின் அனைத்துமடங்கும் முக்கியத்துவத்தின் பின்வரும் 10 அம்சங்களை சாராம்சப் படுத்துவதற்கு முயற்சி எடுத்துள்ளது:

உள்ளூர் மக்கள் இப்பணிக்குழுவையும், அதன் பதவியினரையும் பக்கச்சார்பற்றவர்களாக காணுதல் வேண்டும். மோதுகைத் தரப்பினருள் எவராது பணிக்குழுவை அல்லது அதன் பதவியினருள் சிலரைத் தம் சொந்த நலனுக்காக பயன்படுத்தமுனையும்போது பணிக்குழுவும், அதன் தகவல் ஆக்கக்கூறும் தனது பக்கச் சார்பின்மை மற்றும் நடுநிலைமை விம்பத்தை பேணிப்பாதுகாக்கக் கூடியவராக இருக்கவேண்டும். எப்படியாயினும், பக்கச்சார்பின்மையைப் பேணுவதற்கான முயற்சிகள் செயலின்மையை ஊக்குவிக்கக்கூடாது. அதற்கு மாறாக, சமாதானத்தைக் காப்போர் தமது பணிகளை உறுதியாகவும், புறநிலை யதார்த்தத்துக்கு ஏற்ற நிலையிலும் நிறைவேற்றுதல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு தனது நடவடிக்கைகளில் ஒளிவுமறைவின்மை, வகைப்பொறுப்பு கூறுவதற்கான கோட்பாடுகள்குறித்த அர்ப்பணிப்புணர்வை வெளிக்காட்டுதல் வேண்டும். அந்த அமைப்பை சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஒரு அமைப்பாக நோக்கக்கூடாது. பணிக் குழுவுக்கு அல்லது அதன் பதவியினருக்கு எதிராக உள்ளூர் மக்களின் மனக்குறையை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு ஒரு குறைகேள் அதிகாரியை அல்லது ஒரு குவியப்புள்ளியாக பணியாற்றக்கூடிய ஒருவரைக் குறித்துச் சிந்திக்கலாம்.



உள்ளூர் மக்களின் கலாசார மரபுகள் மற்றும சமூக பெறுமானங்களுக்கு மதிப்பளித்தல் அவர்களுடன் நல்ல உறவுகளை பேணுவதன் முக்கிய பகுதியாகும். மேலுத்தியோகத்தர்கள் சகலருக்கும் அவர்கள் பணியாற்றும் நாட்டின் வரலாறு, கலாசாரம் மற்றும் வாழ்வின் ஏனைய அம்சங்கள் குறித்து விளக்கங்கள் அளிக்கப்படவேண்டும்.

அடிப்படைக் குடியியல் சேவைகள் மற்றும் அழிந்துபோன தேசத்தில் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண நடைவடிக்கைகளுக்கான ஆதரவுபோன்ற சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் உள்ளூர் மக்களின் நம்பிக்கையைப்பெற்று செயற்பாட்டுக்கான அடிமட்ட மக்களின் ஆதரவை அதிகரித்துக்கொள்வதற்கான ஒரு பயனுறுதியுள்ள வழியாகும்.

அந்த நடவடிக்கை அதன்சமாதானத்தைப் பாதுகாக்கும் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளின்போது தற்போதுள்ள உள்ளூர் அதிகாரசபைகளோடும், ஜனசமூகத் தலைவர்களோடும் சேர்ந்து செயற்படுவதோடு, அதன் சமாதான முன்முயற்சிகள், மோதுகை முகாமைத்துவம் சம்பந்தமான உள்ளூர் நடைமுறைகளுடன் இணைந்துசெல்வது அவசியமாகும். அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமை நியமங்கள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் என்பவற்றுக்கு இணக்கமாக இருக்கவேண்டியதும் அவசியமாகும். சமீபகால மற்றும் தொடரும் மோதுகைகளின் போது, அநேக சந்தர்ப்பங்களில் சமுதாயத்தை உண்மையில் பிரதிநிதித்துவம் செய்பவர் யாரென்பது தெளிவற்றிருப்பதால், உள்ளூர் சமுதாயத் தலைவர்களை இனங்காணும்

இந்த நடவடிக்கை மிகவும் அவதானத்தடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். பகைமை, மக்கள் இடம்பெயர்வு மற்றும் ஏனைய மெத்தனப்போக்குகள் காரணமாக மரபுரீதியான சமூகப் பாங்குகளும் பாத்திரங்களும் தெளிவற்றவையாகியிருக்கக்கூடும் அல்லது புதிய இராணுவ அதிகாரப் படிநிலைகளின்கீழ் அமிழ்ந்திருக்கக்கூடும்.

சமாதானத்தைக் காக்கும் பணிகள் மேலும் பன்முகத்தன்மை கொண்டவையாகும்போது சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பது அவற்றின் நடவடிக்கைகளின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக மாறுகின்றது. யுத்தம் புரியும் தரப்பினருக்கிடையே மீளிணக்கத்தை வலுப்படத்துபவையும், சமூக பொருளாதார அகநிலை அமைவுகளைப் புனர்நிர்மாணம் செய்வதுமான செயல்முறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவது வலியுறுத்தப்படுதல் வேண்டும். அதனால், பணிக்குழு வெளியேறியதும் ஒரு வெற்றிடம் ஏற்படாமல் தேசம் தொடர்ந்தும் கட்டியெழுப்பக்கூடிய சமாதானம் மற்றும் அபிவருத்தி அத்திவாரம் ஒன்று இடப்பட்டிருக்கும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு சமாதானப் படைகளின்அமைப்புருவாக்கத்தின அவை நிறைவேற்ற எதிர்பார்க்கும் புதிய மற்றும் மாறிவரும் பாத்திரத்தின் தன்மைக்கேற்றதாக அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். சமாதானத்தையும், பாதுகாப்பையும் பேணுவதாக நோக்கம் அமையும்போது இது பிரதானமாக சண்டையிடும் துருப்புகளைக் கொண்டதாகவும் அமையலாம். பணிக்குழுவின் கவனம் சமாதானத்துக்கு ஆதரவளிப்பதாகவும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதாகவும் மாறியபின்னர், இந்த மாற்றங்கள் படிப்படியாக ஏற்படலாம். இதனால் கூடுதலாக புனரநிர்மாணத்தில் உதவக்கூடிய பொறியியலாளர் அலகுகள் மற்றும/அல்லது ஏனைய அலகுகள் சேர்த்துக் கொள்ளப்படலாம். சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான சுயதீர்மானத்திற் செலவளிக்கக் கூடிய நிதிகள் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதிக்கு கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதனால் உள்ளூர் அதிகாரிகளுடனும், மனிதநேய சமுதாயத்துடனும் அவரது செல்வாக்கை அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். பணிக்குழு துரித தாக்கத்தை ஏற்படுத்தும் கருத்திட்டங்களுக்கும், அகநிலையமைவுத் திருத்தங்களுக்கும் ஏனைய விடயங்களுக்கும் இந்த நிதியைப் பயன்படுத்தலாம்.



ஐக்கிய நாடுகள் அமைப்பின் சமாதானத்தைக் காக்கும் பணியின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக மறைமுகமாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதலை ஊக்குவிக்கும் பணி அமைதல் வேண்டும். அரசசார்பற்ற குடியியல், தொழில்சார், வியாபாரத் தொழில் மற்றும் ஏனைய சங்கங்களின் வலையமைப்பு ஒன்றுக்கு புத்துயிரூட்டுதல் அவசியமாகும்.

ஒரு நடவடிக்கையை முற்றாக நிறுத்தும்வேளையில் மோதலுக்குப்பிந்திய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியில் உதவக்கூடியவகையில் நாட்டில் விட்டுச்செல்லக்கூடிய மூலவளங்கள் சம்பந்தமாகக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

இந்த விதந்துரைப்புகளில் தீர்வுகள் நிலைபேறாக இருக்கவேண்டுமாயின், அவை உள்ளூர் யதார்த்தங்கள் மற்றும் கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பது அவசியம் என்பது அங்கீகரிக்கப்படுகின்றது. இவை பயனுள்ள வழிகாட்டலாக இருந்தபோதிலும், இவை செயற்பாட்டு மட்டத்தில் எவ்வளவு சிறந்தமுறையில் நடவடிக்கைகளாக மாற்றப்படமுடியும் என்பதிலேயே விடயங்கள் பெருமளவுக்குத் தங்கியிருக்கும்.

செயற்பாட்டின் உள்ளூர் அல்லது தந்திரேபாய மட்டங்களின் மோதுகைத்தீர்வு அணுகுமுறைகளின் பிரயோகத்தில் மேலும் அதிகரித்த எண்ணிக்கையிலான சிறந்த மற்றும் மோசமான நடைமுறை சம்பந்தமான உதாரணங்கள் இப்பொழுது காணப்படுகின்றன. உள்ளூர் மேல்உத்தியோகத்தர்களிடம் பேச்சுவார்த்தைகள் மற்றும் உறவிணைப்பு என்பவற்றை

ஆக்கபூர்வமானமுறையில் பயன்படுத்தவதுகுறித்து லெப். கேணல் பொப் ஸ்டுவார்ட் பின்வரும் விபரத்தை வழங்குகின்றார். இவர் 1992 ஓகஸ்ட் மற்றும் 1993 மே என்பவற்றுக்கிடையிலான காலப்பகுதியில் பொஸ்னியாவில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் படையுடன் பணியாற்றிய பிரித்தானியப் படைப்பிரிவுக்கு (UNPROFOR) கட்டளைத் தளபதியாக விளங்கினார். அவர் (ஸ்டுவார்ட் 1993, 317) பின்வருமாறு கூறுகின்றார்:

எதற்கும் எதுவித மதிப்புமின்றி பலவந்தமாக ஒரு வழியை ஏற்படுத்திக்கொண்டு போவதற்கான பணிப்பாணை எமக்கு இருக்கவில்லை. எமது நோக்கங்களை எப்பொழுதும் நாம் ஈட்டிக்கொள்ளவிரும்பியது பேச்சு வார்த்தைகள் மூலம் ஆகும். ஒரு வாகனத்தொடரணியை அது இறுதியில் குறிப்பிட்ட செல்லிடம் போய்ச்சேரும் என்ற நம்பிக்கையுடன் அனுப்பிவைப்பது மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை. நாம் உள்ளூர்த் தொடர்பு நபர்களுடன் சேர்ந்து பணியாற்றி சாதகமான நிலைமைகளை உருவாக்கவேண்டியிருந்தது. இதனால்தான் நான் தொடரிணைப்பு உத்தியோகத்தர்களின் ஓர் அனைத்துமடங்கும் முறைமையை தாபித்து, ஒரு குறிப்பிட்ட பிரசேத்தில் உறவுகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினேன்.

மிகவும் பயனுறுதியுள்ள வகையில் பேச்சுவார்த்தையாளர்களைக்கொண்டு உருவாக்கப்படும் இந்த வலையமைப்பு உள்ளூர் மக்கள் மற்றும் நிலைமைகள் குறித்த உயர்மட்டத்திலான அறிவை உருவாக்குமென்று ஸ்டுவார்ட் தெரிவிக்கின்றார். இவ்வாறாக, அப் பிரதேசம் முழுவதிற்கும் மனிதநேய உதவிகளை விநியோகம் செய்யும் அதிஉச்ச ஆற்றுதிறன் பிரித்தானியப் படையணிக்கு இருந்தது.

இதுசெயற்பாட்டு மட்டத்தில் மோதுகைத்தீர்வு எவ்வாறு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். எவ்வாறாயினும், டேவிட் லாஸ்ட் (1997, 129 - 130) சுட்டிக்காட்டியவாறு, படைவீரர்களுக்கும், கட்டளைத்தளபதிகளுக்கும் மற்றும் வெளிக்களத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் யுத்த நுட்பங்கள், தொடர்புத் திறன்கள் மற்றும் செயற்பாட்டு மட்டத்தில் இத்தந்திரங்களை ஒருங்கிணைத்தல் குறித்த விடயங்கள் சம்பந்தமாக கூடுதலான தகவல்கள் தேவைப்படும். இத்தகைய வழிகாட்டலை வழங்குவதற்கு பெருமளவிலான நடைமுறை ஆய்வுகள் நடத்தப்பட்டு மேலும் பரந்த அளவிலான ஒரு தொடரான குறித்த விடய ஆய்வுகள் சம்பந்தமான விடயங்களை ஒப்பிடுவதும் அவசியமாகும். உதாரணமாக, ஒரு பகைமை உணர்வுமிக்க சமுதாயத்தினரால் முற்றுகையிடப்படும்போது சமாதானத்தைக் காப்போர் எவ்வாறு நடந்துகொள்ளுதல் வேண்டும்? நடைமுறைப்பிரச்சினை தீர்க்கும் பேச்சு வார்த்தை மற்றும் இணக்கட்டுப்பாட்டுத்திறன்களை எவ்வாறு பயனுறுதியுள்ளவகையில் பயன்படுத்தலாம்? (வெளிக்களத்தில் எத்தகைய சூழ்நிலைகளில், என்ன நோக்கத்துக்கு)?

மேலும் உயர்வான உபாய மட்டங்களில், பிரதானமாக, கொசோவோ நெருக்கடிக்கு பிரதிவிளைவாக பரிணமித்த ஒன்றான 1990 களுக்குப் பின்பான சர்வதேச மோதுகை முகாமைத்துவ முறைமை ஒன்றின் கட்டுக்கோப்பு ஒன்றை நாம் பார்க்கத்தொடங்கலாம். 1999 ஜூனில் NATO வுக்கும் யூகோஸ்லாவிய இராணுவத்துக்குமிடையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ரஷ்ய விசேட தூதுவரால் இடைத்தரகுமுறையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளைத் தொடர்ந்து NATO அமைப்பு தனது வான் தாக்குதலை நிறுத்தியது. சமகாலத்தில் பாதுகாப்புச்சபை கொசோவோவில் ஒரு சர்வதேச சிவில் மற்றும் பாதுகாப்புப் படையை ஐ. நா அனுசரணையின் கீழ் நிறுத்திவைக்கும் தீர்மானத்தை அறிவித்தது. மோதுகைக்கான இந்தத் தீர்வு பின்வரும் மூலக்கோள்களின் அடிப்படையில் இடம்பெறவிருந்தது. இம் மூலக்கோள்கள் மே 6ம் திகதி இடம்பெற்ற G8 நாடுகளில் வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டத்தில் அங்கிகரிக்கப்பட்டவையாகும்.

- வன்செயல் மற்றும் அடக்கு முறைக்கு உடனடியான மற்றும் செவ்வைபார்க்கக்கூடிய முடிவு
- யூகொஸ்லாவிய சமஷ்டிக் குடியரசின் சகல இராணுவ பொலிஸ் மற்றும் துணை இராணுவப்படைகளை வாபஸ்பெறுதல்
- கணிசமான அளவு NATO பங்கேற்பு மற்றும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டளைத் தலைமைக்குக் கீழ் ஒரு பயனுறுதிமிக்க சர்வதேச மற்றும் பாதுகாப்புப் படையினரை பயன்படுத்துதல்
- சகல அகதிகளும் பாதுகாப்பாகத் திரும்பிவருதல்
- சுயாட்சி மற்றும் கொசோவோ விடுதலை இராணுவத்தின் ஆயுதக்களைவு என்பவற்றுக்கான ஏற்பாடுகளை செய்யும்வகையில் ஓர் அரசியல் செயல்முறையை ஆரம்பித்தல்
- நெருக்கடிப் பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய ஓர் அனைத்துமடங்கும் முயற்சி.

ஐ.நா சாசனத்தின் 7வது அத்தியாயத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டதும் NATO அமைப்பின் வட அத்திலாந்திக் மன்றத்தின் கட்டளைத் தலைமையின்கீழ் உள்ளதுமான KFOR பாதுகாப்புப்படை ஜீன் 12ம் திகதி கொசோவோவினுள் பிரவேசித்தது. இப்பிராந்தியத்தில் ஓர் இடைக்கால சிவிலியன் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் அதிகாரத்தை பாதுகாப்புசபை செயலாளர் நாயகத்துக்கு வழங்கியது. 1999 ஜீலை நடுப்பகுதியளவில் செயலாளர் நாயகம் கொசோவோவில் பின்னர் ஐ.நா இடைக்கால நிர்வாக பணிக்குழு என அழைக்கப்பட்டதற்கான ஓர் அனைத்துமடங்கும் சட்டத்தை சமர்பித்தார் (UN Interim Administration Mission-UNMIK). கொசோவோவில் சகல சட்டமியற்றும் அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நீதிதுறை அதிகாரம் என்பவற்றின் மிதான சகல அதிகாரமும் UNMIK இடம் வழங்கப்பட்டது. அதன் பணி 5கட்டங்களில் ஒன்றிணைக்கப்படவிருந்தது. மீள்வரும் அகதிகளுக்கான ஆதரவு, பொது சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல்(சுகாதாரம் கல்வி மற்றும் சமூகசேவைகள் உள்ளடங்காலாக), சிவிலியன் பொலிஸாரை (CIVPOL) கடமையில் ஈடுபடுத்துதல், பொருளாதார மீட்சி திட்டமொற்றை அபிவிருத்தி செய்வது, ஜனநாயக மற்றும் சுயாட்சி அரசாங்கத்தை முன்னேற்றுவதற்கான நிலையான நிறுவனங்களை அபிவிருத்தி செய்வது என்பவையே அவையாகும்.



UNMIK ஒவ்வொன்றும் சமாதானத்தை மீட்டெடுக்கும் சிவிலியன் அம்சங்களைக் கொண்டதாக நான்கு பிரிவுகளாக அமைக்கப்பட்டது.இவை நான்கு தூண்கள் என அழைக்கப்படுகின்றன. முதலாவது தூண் ஐநா வழிகாட்டலின்கீழான சிவிலியன் நிர்வாகமாகும். இரண்டாவது தூண் UNHCR வழிகாட்டலின் கீழ் மனிதாபிமான உதவிகளைக் கையாளுகின்றது. மூன்றாவது, OSCE அமைப்பின் வழிகாட்டலின்கீழ் ஜனநாயகமயப்படுத்தல் மற்றும் நிறுவனங்களைக் கட்டியெழுப்பதலை கையாளுகின்றது. நான்காவது தூண் ஐரோப்பிய ஒன்றியத்தின் வழிகாட்டலின் கீழ் பொருளாதார புனர்மானத்துக்குப் பொறுப்பாகவுள்ளது.

இக்கட்டமைப்பு அமைப்புகளின் கூட்டொன்று மோதுகைத்தீர்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலின் பரந்த குறியிலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான சிறந்த உதாரணமாகும். கொசோவோ கருத்திட்டம் எவ்வளவு சிறப்பாகச் செயற்பட்டுள்ளதென்பதை இன்னமும் கூறமுடியாது என்றபோதிலும், இராணுவ தலையீடுகள் மாத்திரம் தம்மளவில் சமாதானத்தை மீட்டு எடுத்துவிடமுடியாது என்பதைத் தெளிவாகியுள்ளது. ஆகவே, நாம் முதலில் சமாதானத்தைக் காப்பதற்கு, சமாதானத்தை பங்குடைமையுடன் பணியாற்றும் ஏனைய பிராந்திய அமைப்புகளின் அனுசரணையின்கீழ் பயனுறுதியுள்ளவகையில் அணிதிரட்டி பயன்படுத்துவது எவ்வாறு என்பதைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். இரண்டாவதாக, போரினால் சிதைவடைந்த பிரதேசங்களில் கட்டுபாடு மற்றும் வன்முறையை அடக்குதல் என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் தொடர்புகளைக் கூட்டிணைப்புச்

செய்தல் போன்றவற்றுக்கான மேலும் பயனுறுதியுள்ள வழிகளைக் காணுதல் வேண்டும்(பாதுகாப்பு மற்றும் பொலிஸாரின் கருமபபாடு).இது நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை நிலைபேறாக்குதல் அல்லது மீட்டெடுத்தல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு யாதார்த்தபூர்வமாக ஆதரவளித்தல் செயல்முறைகளின் அபிவிருத்திக்கு சமாந்தரமாகச் செல்லுதல் வேண்டும். நிறைவுசெய்யும் பகுதியில் நாம் இப்பிரச்சினைகள் குறித்து மேலும் நெருக்கமாகப் பார்க்கவுள்ளோம்.

# 7. எதிர்கால முன்னுரிமைகள்

## 7.1 மோதுகை நெருக்கடிகளுக்கான துரிதபதிற்குறி தகைமைகளை மேம்படுத்துகை

முன்னாள் யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டாவில் ஐ.நா இடர்களுக்கு முகம்கொடுத்த போதிலும், அநேகமான அரசுகள் தொடர்ந்தும் சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் பேணும் பணியில் ஐ.நா அமைப்பு மிகவும் பொருத்தமான முறையில் பொறுப்புகளை நிறைவேற்றிவருவதாக எண்ணுகின்றனர். சகல அரசுகளும் பொதுச்சபையில் நேரடியாகவும், பாதுகாப்புச் சபையில் வேறு வழிகளிலும் பிரதிநிதித்துவபெறுவதும் மற்றும் ஐ நா சமாதானப் பணிக்குழுக்களின் பெறுமதியைக் கண்டுணர்ந்தமையுமே இதற்கான காரணங்களாகும். ஆயினும், பயனுறுதியுள்ள அமைதிபேணலை உண்மையில் ஐ.நா அமைப்பு கையாள வேண்டுமெனின், அத்தோடு அது அங்கீகரிக்கப்பட்ட இராணுவ வல்லரசுகளான முன்னணித் தேசங்கள் கைகளில் அல்லது NATO போன்ற இராணுவ கூட்டுகளின் கட்டுப்பாட்டுக்குள் செல்லாதிருப்பதை உறுதிசெய்வதற்கு, இவ்வமைப்பு ஸ்திரமற்ற சாத்தியவளமுள்ள மோதுகைச் சூழ்நிலைகளில் தீர்மானமாக செயலாற்றும் தனது இயலுமையை விருத்திசெய்துகொள்ளுதல் வேண்டும். எதிர்கால அமைதிபேணல் பணிக்குழுக்கள் சிறியனவாக இருக்கக்கூடும். அதேவேளையில் அவை மேலும் தொழில்சார் ஒழுங்கமைப்பு மேலும் வினைத்திறனுள்ள பயன்பாடு மற்றும் மேலும் சிறந்த தயார்நிலை, பயிற்சி மற்றும் முன்பைவிடச் சிறந்த உபகாரண ஆதரவு என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். 

அதிருஷ்டவசமாக அது சந்தேகம், சுயவிமர்சனம் மற்றும் சுயதேடல் என்பவை நிறைந்த ஒரு காலப்பகுதிக்குப் பின்னர் அதன் அமைதி பேணும் இயலுமையை அபிவிருத்திசெய்துவருகின்றது. அண்ணளவாக 27 அங்கத்துவ அரசுகள் துரிதமாக பயன்படுத்தக்கூடிய பணித்தலைமையகம் (RDMHQ) ஒன்றை அமைப்பதற்கான ஆதரவை கட்டியெழுப்பிவருகின்றன. இவை துரித படைப் பயன்பாட்டின் நண்பர்களென்று கூட்டாக அழைக்கப்படுகின்றன. அத்தோடு 1994 இல் சமாதானத்தை காக்கும் நடவடிக்கைகள் திணைக்களத்துக்கு (Department of Peacekeeping Operation-DPKO) கிடைக்கக்கூடிய சமாதானத்தை காக்கும் மூலவளங்களின் தரத்தையும், வீச்சையும் மேம்படுத்தக்கூடிய முயற்சியாக ஓர் ஐ. நா தயார் நிலை ஒழுங்கமைப்பு முறைமை (UNSAS) ஏற்படுத்தப்பட்டது. மேலும் சமீபத்தில் டென்மார்க் அரசாங்கம் 15-30 நாட்கள் எதிர்பார்ப்புப் பதில்நடவடிக்கைக் காலத்தையும் 4000 - 5000 துருப்பினரையும் கொண்ட பல்தேசிய தயார்நிலை உயர்செயற்றிறன் படைப்பிரிவென்றை (SHIRBRIG) நிறுவியது பிரத்தியேகமாக நேரடித்தேசங்களான நெதர்லாந்து மற்றும் கனடா இந்த வகையான பல் வகைப்பட்ட மேலும் சிறந்த தயார் நிலை ஒழுங்குகளை உருவாக்குவதன்மூலம் ஐ. நா படைகளின் துரிதப் பயன்பாட்டு இயலுமையை மேம்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளன. (லாங்கில் 2000)

படைகளை அனுப்பி உதவும் பல நாடுகள் 1990 களில் தமது சமாதானத்தைக் காக்கும் இயலுமைகளைக் கணிசமான அளவு தேசிய மட்டத்தில் மேம்படுத்தியுள்ளன. தரநியமங்களை உயர்த்தும் வகையில் சர்வதேச பயிற்சி நிலையங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒன்றிணைவான ஒழுங்குநெறிக்கோவைகளை முன்வைத்துள்ளன. 1993இல் நியூயோர்க்கில் DPKO வினுள் ஒருசூழ்நிலை மத்திய நிலையம் உருவாக்கப்பட்டது. இது ஐ. நா தலைமையகத்துடன் சமாதானத்தை காப்போர் வழமையான வேலைநாட்களிலும், அலுவலக நேரங்களிலும் மாத்திரம் தொடர்புகொள்ளக்கூடியதாகவிருந்த முன்னைய நிலைமையில் ஒரு முக்கியமான மேம்பாட்டைக் குறித்தது. இந்த நிலையம் தற்போது 24 உத்தியோகத்தர்களுடன் 24 மணிநேரமும் கருமமாற்றுகின்றது. இவர்கள் பாரிய நடவடிக்கைகள் குறித்து UNSG க்கு அறிக்கையிடுகின்றனர்.

சர்வதேச அமைதிகாக்கும் முயற்சி எதிர்நோக்கும் பல சவால்களை ஏற்றுச்செயற்படும் போதிய பிரயத்தனங்களுக்கான தற்போதைய மூலவளங்களில் பற்றாக்குறைநிலை உள்ளதென்பதும் தெளிவானதாகும். சியாரா லியோனில் முதலாவது ஐ. நா பணிக்குழு துருப்பினர் (UNAMSIL) வந்திறங்கிய ஒருசில வாரங்களினுள் கலகக்குழுக்கள் அவர்களினுள் 500 பேரை சிறைக்கைதிகளாக்கினர். ஏனையோர் தலைநகர் ப்ரீடவுனைவிட்டு வெளியேறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். அந்த நடவடிக்கைகளின் பிரத்தியட்சமான பலவீனம் பெருமளவிற்கு அந்த நேரத்தில் UNAMSIL 30 சமனற்ற தேசிய படைப்பிரிவுகளிள் குழுவாக இருந்தமையும், அவர்களுக்கு ஒருங்கிணைவான நியமங்களோ, பயிற்சி நடவடிக்கை முறைகளோ இல்லாமையுமாகும். நடவடிக்கைமட்டத்தில் UNAMSIL நியூயோர்க்கில் DPKO வின் அதரவைப்பெற்றிருந்தது. ஆயினும், அதன் ஆளணி இயலுமை வில்கின்சனின் மதிப்பீட்டின் பிரகாரம் அநேகமான தேசிய பாதுகாப்பு அமைச்சுக்கள் திருப்தியற்றதென்று முடிவு செய்யும் வீதத்திலேயே அமைந்திருந்தது (வில்கின்சன் 2000).

எதிர்கால அமைதிபேணும் நடவடிக்கை குறித்த பிராஹிமி அறிக்கையில் (UN2000a) இப் படிப்பினை கவனத்தில் கொள்ளப்பட்டதற்கான சில சான்றுகள் உள்ளன. இது அல்ஜீரியாவின் முன்னாள் வெளிநாட்டமைச்சரான லக்தார் பிராஹிமி தலைமையில் கொபி அனான் நியமித்த ஒரு குழுவினால் தயாரிக்கப்பட்டதாகும். இக்குழுவின் தேடல்முடிவுகள் 2000 ஆகஸ்டில் வெளியிடப்பட்டன. அதில் சமாதான நடவடிக்கைகளுக்கான ஐ. நா இயலுமையை அதிகரிப்பதற்கான ஒரு தொகுதி பரந்த ஆரோக்கியமான விதந்துரைப்புக்கள் இடம்பெற்றிருந்தன. இதன் நோக்கம் யாதெனில், படைகளை அனுப்பிவைப்பதற்கு முந்திய கட்டத்தில் அவற்றை மேலுஞ் சிறந்த முறையில் தயாரிப்பதன் மூலமும், பணிப்பாணை குறிக்கோள்களை ஈட்டிக்கொள்வதற்கு அவசியமான மூலவளங்கள் மற்றும் படைமட்டங்களை மேலும் யதார்த்தரீதியில் மதிப்பீடுசெய்வதன் மூலமும் கடந்தகாலத்தில் சந்தித்த தோல்விகளைத் தவிர்த்துக் கொள்வதாகும். படைகளுக்கு யதார்த்தபூர்வமான, சாதிக்கக்கூடிய பணிப்பாணைகள் வழங்கப்படும்போது மாத்திரமே அவை பயன்படுத்தப் படவேண்டும் என்றும் இப்பணிப்பாணை குறிக்கோள்களைக் ஈட்டிக்கொள்வதற்கு தேவையான மூலவளங்கள் கிட்டுமென்று தெளிவாகத் தெரிந்த வேளையிலேயே அவ்வாறு செய்தல் வேண்டும் என்றும் இவ்வறிக்கை விதந்துரைப்புக்களைச் செய்துள்ளது.



விரைவாகப்படையனுப்பலைச் செய்யும் விடயத்தில் ஐ.நா அமைப்பு பாதுகாப்புச் சபைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டு 30 தினங்களினுள்ளும், சிக்கலான அமைதிகாக்கும் நடவடிக்கைகள் விடயத்தில் 90 நாட்களுக்குள்ளும் பூரணமான மரபுரீதியான அமைதிகாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் செயற்பாட்டு இயலுமை மற்றும் துரிதபயனுறுதிமிக்க படையனுப்பல் இயலுமைகளை வரைவிலக்கணம் செய்யவேண்டுமென்றும் இவ்வறிக்கை மேலும் விதந்துரைப்புச்செய்துள்ளது. இக்குறிக்கோளை இலகுபடுத்தும்வகையில்அங்கத்துவ அரசுகள் ஐ.நா தயார் நிலை ஒழுங்கு முறைமை (UNSAS) சூழமைவினுள் பங்குடைமைகளை ஏற்படுத்திக்கொள்ளும் பல அர்த்தப்பொதிவுள்ள பிரிகேட் அளவிலான படைகளைக்குறிப்பிட்ட பதில்செயற்பாட்டு காலத்தினுள் பயனுறுதியுள்ளவகையில் அனுப்பிவைக்ககூடியதாக தயார்நிலையில் வைத்திருக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றன.

ஆயினும், அறிக்கை இராணுவ இயலுமைகள் மேம்படுவதில் மாத்திரம் கவனம் செலுத்தவில்லை. அது ஐ.நா அமைதி நடவடிக்கைகளில் சிவிலியன் இயலுமைகளை பலப்படுத்துவதற்கான தேவையையும் அங்கீகரித்துள்ளது. இந்த விதந்துரைப்புகளில் சில கீழே நோக்கப்பட்டுள்ளன.

## 7.2 சமாதானத்தைக் கொண்டுநடத்துகைக்கான படைநிலை, காப்புநிலை, குடிநிலை வகிபாகங்களை ஒருங்கிணைத்தல், சமச்சீராக வைத்திருத்தல் மற்றும் வேறுபடுத்தல்

அமைதிபேணலின் மேலும் வலுமிக்க தத்துவத்தையும், நடைமுறையையும் ஏற்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் மோதுகைத்தீர்வு மற்றும் நிலைபேறான சமாதானத்தைக் கட்டியெழுப்பலின் நீண்டகால குறியிலக்குகளோடு நெருக்கமாக ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும். சமாதானத்தைக் காக்கும் படைகளின் தலையீட்டினூடாக மோதுகைகள் பயனுறுதியுள்ளவகையில் தணிக்கப்பட்ட பின்னரும் சமுதாயங்கள் மீது வன்செயல்களின் விளைவுகள் வழக்கமாக நீண்டகாலம் நீடிப்பவையாகும் என்பதை நினைவில் கொள்வது அத்தியாவசியமானதாகும். மீண்டும், மீண்டும் சிவில்யுத்தத்தின் கொடுரமான அனுபவங்களுக்கு ஆளாகிய சமூகங்கள் போர்க்கால தளபதிகளின் உடல்ரீதியான மற்றும் உளவியல்ரீதியான கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. டேவிட் லாஸ்ட் அவர்களின் வார்த்தைகளில் கூறுவதாயின், அவர்கள் பருந்துகள் மாத்திரமே உயிர்பிழைக்கும் என்று நம்பும் நிலைக்கு வருகின்றனர். இத்தகைய சூழ்நிலைகளில் லாஸ்ட் (2000, 82)பின்வருமாறு தெரிவிக்கிறார்:

> *போரினால் சிதைவடைந்த சமூகங்களுக்கு சமாதானத்தையும், ஒத்துழைப்பையும் மீண்டும் கட்டியெழுப்பி உதவிசெய்வதற்கான எமது இயலுமையில் உண்மையில் இரண்டு இடைவெளிகள் உள்ளன. முதலாவது இடைவெளி, தரப்பினரிடையே வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதிலான எமது இயலுமையில் உள்ள இடைவெளியாகும். இது பருந்துகளை ஒரு பெட்டியில் அடைக்குமாறு எம்மை வேண்டுகின்றது. இரண்டாவது, தரப்பினரிடையே ஒத்துழைப்பை அனுமதிக்கும் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் எமது இயலுமையில் உள்ள இடைவெளியாகும். இவை புறாக்களை அவற்றின் பெட்டியிலிருந்து வெளியேற அனுமதிக்கின்றன.*

லாஸ்ட் மேலும் வன்முறையை அடக்குதல் மற்றும் உறவுகளை மீளக்கட்டியெழுப்புதல் போன்ற பல்லினவகையான குறிக்கோள்களுக்கு இடையிலான ஓர் இடைவெளியை மேலும் இனங்காணுகின்றார். நடைமுறை அமைதி பேணல் அனுபவம் கொண்ட ஒரு கனடிய இராணுவ உத்தியோகத்தர் என்றவகையில் மாத்திரமன்றி, அமைதி பேணுவோரின் செயற்பாட்டுத்தேவைகள் குறித்த சேவைக்கு மோதுகைத்தீர்வு பகுப்பாய்வின் நுண்ணறிவுகளைக் கொண்டுவருவதற்கு முதல்முயற்சிகளை மேற்கொண்ட முன்னணிக்கல்வி மான் என்றவகையில் டேவிட் லாஸ்ட் அவர்கள் இது குறித்து கருத்து வழங்குவதற்கு விசேட தகைமை கொண்டவராவார். பொஸ்னியாவில் ஆரம்பித்த பணி அங்கு பிரத்தியேகமானயையும் அக்கறையும் வாய்ந்ததாகும். இந்தப் பகுதி இங்கு அவரது அனுபவங்கள்குறித்த அவரது கருத்துக்களின் மீள்பார்வை ஒன்றுடன் நிறைவடைகின்றது. (லாஸ்ட் 2000, 80 - 96)

லாஸ்ட் இனங்கண்ட சில இடைவெளிகளை நிரப்புவதாயின் சமகால மற்றும் எதிர்கால அமைதி பேணல் செயற்பாடுகளில் இராணுவ பொலிஸ் மற்றும் சிவிலியன் மோதுகைத்தீர்வு பாத்திரங்களிடையே ஒரு பயனுறுதியுள்ள வேறுபடுத்தலுக்குத் தெளிவான ஏற்பாடு செய்தல் அவசியமாகும். இந்த விடயப் பரப்புக்களிடையே ஒன்றையொன்று இட்டுநிரப்பும் தன்மையை மேம்படுத்தி தொடங்குவது அவசியமாகும். இவ்வாறு வேறுபடுத்தலின் முதலாவது மட்டம், இராணுவ மற்றும் பொலிஸ் கருமப்பாடுகளிடையே சமாதானத்தைக் காப்போர் பல மட்டங்களில் பாதுகாப்பை வழங்கவேண்டும் என்பதாகும். இரண்டாவது மட்டம்,ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவப்படை ஒன்றினால்

மேற்கொள்ளப்படும் வன்முறையைக் கட்டுப்படுத்தும் முயற்சியாகும். அங்கு சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகள் (பெட்டி 2 ஐ பார்க்கவும்)இராணுவ படையணிகள் மட்டத்தில் பாதுகாப்பைக் கையாளுகின்றன. இப்பிரச்சினைகளுக்கு பூரணமாகத் தீர்வு காணப்பட்டபின்னர் நடைமுறைப்படுத்துனர்கள் மேலும் ஒரு பாதுகாப்பு மட்டத்தில் அக்கறை காட்டுதல் வேண்டும், இது சமுதாயங்களைப் பொலீசார் கட்டுப்படுத்துவதாகும். இராணுவரீதியான எதிர்ப்புக்கு பதில் செயற்பாடு காண்பிப்பதில் இராணுவப்படைகள் பயனுறுதியுள்ளவையாக அமையலாம் என்பதை அனுபவம் காட்டியுள்ளது. வழக்கமாக அவர்கள் கலகங்கள், தனிநபர்களுக்கெதிரான அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் மற்றும் சொத்துக்கள்மீது தாக்குதல் என்பவற்றை கையாளுவதில் அத்தனை பயனுறுதியுள்ளவர்களாக இருப்பதில்லை. மோதலுக்குபிந்திய சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ள நடைமுறைப்படுத்துனா்களுக்கு, குற்றவியல் நடவடிக்கை தாக்கங்களை வெற்றிகொள்வதும், மோதுகையின்போது அதிகரிக்கும் போக்கைக்கொண்ட வன்முறையை தோல்வி காணச்செய்வதும் மிகவும் கடினமாகும்.

சமீபத்தில் சமாதானப்படைகளை அனுப்பிவைப்பதில் மீண்டும் மீண்டும் இடம் பெறும் ஒரு சமுதாய மற்றும் தனிநபர் பாதுகாப்புப் பிரச்சினை, திரும்பி வரும் அகதிகளின் பாதுகாப்பையும், மனித உரிமைகளையும் பேணும் பிரச்சினையும், மக்கள் வியாபரத் தொழில்களையும், ஜனநாயக, அரசியல் செய்திட்டங்களையும் அச்சுறுத்தல் எதுவுமின்றி சுதந்திரமாகத் தாபிக்கக்கூடிய சமூக பாதுகாப்புச் சூழலை பொலிஸ் மூலம் ஏற்படுத்தவதுமாகும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் டேவிட் லாஸ்ட் மற்றும் ஏனையோர் வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் ஒரு பரந்த நிறமாலை அணுகுமுறையை அபிவிருத்திசெய்வது அவசியமென்று வாதிட்டுள்ளனா். அநேகமான அமைதி பேணல் செயற்பாடுகளில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு சர்வதேச இராணுவப்படைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன்பின்னர் சிவிலியன் பொலிஸ் படைகள் படிப்படியாக பயிற்சியளிக்கப்பட்டு சேவையில் அமர்த்தப்படுகின்றனர்.



பயனுறுதியுள்ள உள்ளூா் பொலிஸ் சேவைக்கான இந்த அத்தியாவசிய இடைமாற்றம் எப்பொழுதும் நேர்வழி கொண்டதாக இருப்பதில்லை. ஒரு பயனுறுதியுள்ள உள்ளுர் பொலிஸ் படையைப் பயிற்றுவித்து அவர்களுக்கு சட்டநிலைத்தகவு வழங்க CIVPOL அமைப்புக்கும் மற்றும் சர்வதேச பயிற்றுநர்களுக்கும் நீண்டகாலம் எடுக்கக்கூடும். சமுதாயங்களிலுள்ள மக்களுக்கு பாதுகாப்புணர்வை வழங்கும் பொலிசாரின் முயற்சிகளில் நம்பிக்கை கொள்ளவேண்டிய அவசியம் வழக்கமாக உடனடியாக தேவையான ஒன்றாகும். லாஸ்ட் ஆரம்பகால அமைதிப்பேணல் படைச்செயற்பாடுகளில் துணை இராணுவ பொலிஸ் படையினரும் மற்றும் பொலிஸ் ஆளணியினரும் பூரனமாக ஒன்றிணைக்கப்படவேண்டும் என்னும் கருத்தை முன்வைத்துள்ளார்.

- ஐ.நா அவதானிப்புப் பணியாளர்கள் எல் சல்வடோரில் கடமையாற்றியதனை (ONUSAL) அபிவிருத்தி செய்யப்பட்ட துணைநிலை இடைமாற்றக் கால பொலிஸ்படை (PAT) குறித்த பிரத்தியேக உதாரணமாக காட்டப்படலாம். இங்கு ஒரு சிவிலியன் பொலிஸ் கல்விக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்டோர் இந்த அலகுகளை ஆக்கியதோடு, ONUSAL அமைப்பிலிருந்து வந்த CIVIPOL உத்தியோகத்தர்கள் இதற்கு கட்டளைத் தளபதிகளாக விளங்கினர். இவ்வாறாக இவர்கள் இராணுவ சமாதானக் காப்பாளர்களால் வழங்கப்பட்ட பாரிய அளவிலான பாதுகாப்புக்கும், சனசமூக மட்டத்திலான தனிநபர் பாதுக்ப்புக்குமிடையிலான இடைவெளியைப் பயனுறுதியுள்ள வகையில் நிரப்புவதற்கு உதவினர்.

சமகால அமைதி பேணல் நடவடிக்கைகள் பொருத்தமான பயிற்சிபெற்ற சிவிலியன் பொலிசாரின் பெருமளவிலான பற்றாக்குறை மற்றும் சர்வவியாபக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தின் ஆட்சியின்மை என்பவற்றால் அவதியுறுவது தெளிவாகும். ஐ.நா. பின்வரும் விடயங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான தேவையை மிகவும் மெதுவாக அங்கீகரிப்பதற்கு மாத்திரமே ஆரம்பித்துள்ளது:

- ஒப்பிட்டளவில் சிறிய ஒத்துழைப்பு மற்றும் காவல் பொலிஸ் படையினர் (பொலிஸ் நடவடிக்கைகள் மாத்திரமன்றி இராணுவ தந்திரேபாயங்கள் என்பவற்றில் பயிற்சிபெற்று அலகுகளில் அல்லது தனிநபர்களாக அல்லது சிறு குழுக்களாக பயன்படுத்தக்கூடியவர்கள்).
- உள்ளூர் பொலிஸ் கருமப்பாடுகள், அத்தோடு தொடர்புள்ள நீதித்துறை மற்றும் தண்டனை நிறுவனங்கள்.
- மனித உரிமை நிகழ்ச்சித்திட்டங்கள், குற்றங்களைத் தடுத்தல், சிறந்த சமுதாய உறவுகள் என்பவை உள்ளடங்கிய வகையில் பொலிஸ் கல்விக்கழகங்களை முகாமைத்துவம் செய்வதிலான அனுபவம்.

**பெட்டி 4: சமாதானத்தைக் கட்டியெழுப்புதலின் உத்தி ஆக்கக்கூறுகள், பணிகள் மற்றும் திறன்கள்**

| ஆக்கக்கூறு | பணிகள் | திறன்கள் |
|---|---|---|
| ஆக்கக்கூறு | விடுவித்துக்கொள்ளல், ஆயுத கலைப்பு, கண்ணிவெடி அகற்றல் சிவில் மக்களின் பாதுகாப்பு மீள் கட்டமைப்பு தனிநபர்பாதுகாப்பு (அதாவது இனத்துவ, பண்பாட்டு, பால்நிலை விசேட வன்முறை) மனித உரிமை | வன்முறையற்ற சிவில் சமூக பாதுகாப்பிற்கு வகை கூறல், சிகிச்சை, சூழல் கண்காணிப்பு உதவி மற்றும் வலைபின்னல் நடவடிக்கை |
| ஆட்சி | நிறுவன உள்பரிமான விருத்தி தெளிவுத்தன்மை / பொறுப்புக் கூறவேண்டிய தெர்தல் ஒத்துழைப்பு | கூட்டங்களுக்காக வசதிகளை ஏற்படுத்தல் குழு தலைவர்களை விருத்தி செய்தல் குழு தீர்மானிக்'கும் முறை உக்குவித்தல் மற்றும் ஒத்துழைப்பு |
| நிவாரண அபிவிருத்தி | உட்கட்டமைப்பு அபிவிருத்தி சந்தை மீள்கட்டமைப்பு பொருளாதார நிறுவனங்கள் சிறு தொழில் ஊக்குவிப்பு அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொடுக்கும் சமூக சேவை | பொறியியலாளர்/ தொழில்நுட்ப நிபுணத்துவம் தொழில் முயற்சி நிபுணத்துவம் தொழில் முயற்சி அபிவிருத்தி வியாபார நிபுணத்து வம் தலைமைத்துவம் மற்றும் கற்பித்தல் எல்லைகளுக்கூடாக தொடர்பை கட்டியெழுப்பல் |
| மீள உருவாக்குதல் | உள வள சமூக நடவடிக்கைகளில் புலம்பெயர்ந்தோரின் மீள்தெர்ச்சி சமாதானக்கல்வி சமூக முன்னெடுப்புகள் | நபர்களுக்கிடையிலான தொடர்பு குழுகக்களுக்கு சந்தர்ப்பமளித்தல் மோதுகைத்தீர்வு நிபுணத்துவம் மோதுகையின் உள வள சமூக இயகக்க விதிகள் முகாமைத்துவம் |

வித்தியாசப்படுத்தலில் இரண்டாவது மட்டம், ஒருபுறத்தில் இராணுவ மற்றும் பொலிஸ் கருமப்பாடுகளிடையே அவசியமான வித்தியாசங்கள் சம்பந்தப்பட்டதாகும். மறுபுறத்தில் இருப்பது பரந்த சிவிலியன் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் வகிபாகங்களாகும். லாஸ்ட் சமாதானத்தை கட்டியெழுப்புதலின் நான்கு உபாயக்கக்கூறுகளை இனம்காணுகின்றார். இந்த 4 ஆக்கக்கூறுகள் (பாதுகாப்பு, ஆளுகை, நிவாரணமும் அபிவிருத்தியும் மற்றும் மீளிணக்கம்)ஒரு பரந்த வீச்சிலான பணிகளை உள்ளடக்குவதோடு ஒவ்வொரு படிக்கும் அது குறித்த திறன்கள் அவசியப்படுகின்றன (பெட்டி 4 ஐ பார்க்கவும்).

லாஸ்ட் சமாதானத்தைக் கட்டியெழுப்பவதற்கு நடைமுறையில் ஆதரவு வழங்க தேவையான ஒரு வீச்சான திறன்களுக்கும் வகை உதாரணமான சர்வதேச பணிக்குழுக்களின் உள்ளடக்கமான திறன்களுக்குமிடையிலான ஒரு தொடரான இடைவெளியை இனங்காணுகின்றார். இனம்காணப்பட்ட 4 பிரதான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆக்கக்கூறுகள் ஒவ்வென்றுக்கும் அவசியமான திறன்களை வழங்குவதில் நாம் பூரணமான வெற்றியைப் பெறவில்லை (அதே இடம், 87). இவ்வாறாக, உதாரணமாக, ஒரு பணியின் இராணுவ ஆக்கக்கூறு அவசியமான இராணுவ ஸ்திரநிலையை வழங்குகையில் அது வழக்கமாக ஒத்துழைப்பு உறவுகளை மீளவும் கட்டியெழுப்பவதற்கு அவசியமான திறன்களைக் கொண்டிராத நிலையே காணப்படுகிறது. லாஸ்ட் முன்வைக்கும் ஓர் அணுகுமுறை இப்பணியினுள் சிவிலியன் இயலுமைகளை மேலும் சிறந்தமுறையில் ஒன்றிணைக்கும்வகையில் ஜனசமூகஅடிப்படையிலான சிவிலியன் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கருத்திட்டங்களை மேலும் அபிவிருத்திசெய்து, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தீர்மானமான சில திறன்களிலாவது பயிற்சி வழங்குவதாகும்.



இந்த அணுகுமுறை வெஸ்டர் பீ. பியர்சன் சர்வதேச அமைதிபேணல் பயிற்சி நிலையத்தில் நடைமுறை ரீதியாக பிரயோகிக்கப்பட்டதாகும். இது பொஸ்னியாவிலுள்ள பாஞ்சாலுக்கா பட்டினத்தில் ஒழுங்குபடுத்தப்பெற்ற "அயலவர்களுக்கான அனுசரணை வசதிகள்" என்ற செய்திட்டத்தில் செய்யப்பட்டது. இச் செய்திட்டத்தில் 20 உள்ளூர் (பொஸ்னியன் முஸ்லீம்கள், சேர்பியர் மற்றும் குரோவட்ஸ்) மற்றும் 5 சர்வதேச அனுசணையாளர்கள் சமுதாய ஒத்துழைப்புக்கான உணர்வூட்டுவது குறித்து ஊக்கத்தை வழங்குவதோடு சர்வதேச திறன்கள் மற்றும் மூலவளங்களிலிருந்து உள்ளூர் மக்கள் பயன்பெறவும் உதவினர்.

> *உள்ளூர் பிரச்சினைகள் சமாதானத்தீர்வுகளைத் தேட உதவுதல் எனும் நோக்கத்துக்கு அமைவாக புலம்பெயர் குழுமமொன்றைக் கொண்ட சமுதாய நிலையம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. லாஸ்ட் இந்த நிலையத்தின் பணியை சுருக்கமாகக் கூறுகின்றார். ஒரு சமுதாய நிலையமும், அதன் குழுமங்களும் ஏனையசகல சேவைகளுக்கும் மற்றும் அதன் பிரதேசத்துக்கு வன்முறை முரண்பாட்டின் சேவைகளை திருத்தியமைக்க உதவுவதற்கு வரும் அமைப்புகள் என்பவற்றுக்கும் இடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்தும் காரணியாக விளங்க முடியும். குழுமங்கள் அடிப்படையில் உள்ளூர் மற்றும் சர்வதேச தன்மைகளைக் கொண்டிருப்பதால் அவை நீண்டகாலப் பணிகளில் தங்கியிருக்கும் மக்களை அபிவருத்தி செய்வதற்கும், அடிமட்டத்திலிருந்து தேசத்தை மீளக்கட்டியெழுப்பவதற்கும் உதவலாம்.*

லாஸ்ட் ஒரு தலையீட்டில் இக் குழுமங்களின் பல்வேறு ஆக்கக்கூறுகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான ஒரு பெறுமதி மிக்க இணைப்பாகப் பணியாற்றலாம் என்றும், இராணுவப்படை, சர்வதேச அமைப்புகள் அ.சா.நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் மக்கள் என்போரே இப்பல்வேறு ஆக்கக்கூறுகளும், செயற்பாட்டாளரும் என்றும் தெரிவிக்கின்றார். குறிப்பாக எடுத்துக் கூறப்பட்ட முறையில் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட தனிநபர்கள் ஆகியோரால்

ஆக்கப்பட்ட இக்கோஷ்டிகள் ஒரு பரந்த ஒழுங்கிலான பல்வேறு திறன்களை மேலும் உள்ளடக்குவதோடு, பெட்டி 4 இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பல அவசியப்படும் பணிகளுக்கு தீர்வுகாணக்கூடியவையாக உள்ளன. ---------------பிரத்தியேகமாக, இது ஒரு சமநிலையான உள்ளூர்/ சர்வதேச நபர்களைக் கொண்டிருப்பதால், இந்த அணுகுமுறை பிரத்தியேகமாக சிறந்ததாகத்தோன்றுகின்றது. இதன் காரணமாக பரந்த வீச்சிலான சமாதானத்தைக் கட்டியெழுப்பல் திறன்கள் கோஷ்டிகளின் முழுமையூடாக பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக அவர்களுக்கு உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு உள்ளூர்த் தீர்வுகளைக் கண்டறியக்கூடிய தனிச்சிறப்பான இயலுமை ஏற்படுகின்றது. ஐ. நா. சிக்கலான சமாதான நடவடிக்கைகள் என்று தற்பொழுது அழைக்கும் பல்வேறு அம்சங்களை ஒன்றிணைப்பதற்கான அதிகரித்த இயலுமையை வழங்குவதற்கான தேவையும் பிராஹிமி அறிக்கையில் பிரத்தியேகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மோதுகைத்தீர்வுக் கண்ணோட்டத்தில் கொண்டுவரப்படவேண்டிய பல இயைபுள்ள கட்டமைப்பு மாற்றங்கள் உள்ளன. உதாரணமாக, சிவிலியன் பொலிசாரும் மற்றும் மனித உரிமை நிபுணர்களும் அமைதிபேணல் வழிமுறையிலும் மேலும் சிறந்த முறையில் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று அறிக்கை விதந்துரைக்கிறது. அத்தோடு, தமது இராணுவ பாதுகாப்புக் கருமப்பாட்டை பயனுள்ளவகையில் சீர்திருத்துவதற்கும் அதேவேளையில் மோதலுக்குப் பிந்திய சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள தனிச்சிறப்பான சவால்களை மறைமுகமாக சமாளிக்க மேலும் பயனுறுதியுள்ளதும், ஒன்றிணைக்கப்பட்டதுமான சிவிலியன் பாத்திரங்கள் அவசியம் என்றும் அது அழைப்புவிடுக்கின்றது. விசேட சிவிலியன் பொலிஸாருடன் சேர்ந்து சகபாடிகளுடனான சட்டத்தின் ஆட்சிக்கோஷ்டிகளை உருவாக்கக்கூடிய நீதித்துறைத் தண்டனை மனித உரிமை மற்றும் ஏனைய விசேடத்துறை நிபுணர்களுக்கு மேலும் பயனுறுதியுள்ள, அனுப்புவதற்கு முன்னரான தயாரிப்புகள் விதந்துரைக்கப்படுகின்றன. மேலும் முக்கியமாக, அமைதிபேணலின் மோதுகைத்தீர்வு பரிமாணங்கள் என்றவகையில் சமாதான மற்றும் பாதுகாப்பு குறித்த நிறைவேற்றுக்குழு ஐ. நா. வின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் உத்திகளைத் தீர்மானிக்கும் நிரந்தர இயலுமையை வலுப்படுத்தி, இந்த உத்திகளுக்கு ஆதரவான பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துமாறு சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிறைவேற்றுக்குழு பணிக்கப்பட்டுள்ளது.

இச்செயல்முறைக்கு மேலும் உதவிவழங்கும்வகையில் அரசியல் விவகாரங்கள் திணைக்களத்தினுள் சமாதானத்தைக்கட்டியெழுப்பும் ஒரு முன்னோடி அலகை உருவாக்குவதற்கு அறிக்கை ஆதரவு வழங்கியது அத்தோடு, இந்த அலகு பூரணமாக நிதியளிக்கப்படவேண்டுமென்றும், இது முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களில் மதிப்பீட்டின் அடிப்படையில் இடம்பெறவேண்டுமென்றும் விதந்துரைப்புச்செய்தது. இந்தப் பிரேரணை ஒரு புதிய மற்றும் வரவேற்கத்தகுந்த அங்கீகாரத்தைக் குறித்துநிற்கின்றது ஒரு நீண்டகால சமாதான முறைவழியின் நிலைதகவுக்கு மிகவும் தீர்மானகரமான சிவிலியன் அம்சங்களை இது அங்கீகரிப்பதோடு, இவை போதிய அளவு மூலவளங்கள் வழங்கப்பட்டு, ஒன்றிணைக்கப்பட்டு தயார்நிலையில் வைத்திருக்கப்படவேண்டும் என்பது அவசியமாகும். (ஐ. நா 2000A)

தற்போதைய ஐ. நா அமைதிபேணல் பணிக்குழுக்களில் பெரும்பான்மையானவை தமது வகிபாகங்களை மரபு ரீதியான வழிகளிலேயே வியாக்கியானம் செய்கின்றன. அவை போர்நிறுத்தங்களையும், ஆயுதக்களைவு உடன்படிக்கைகளையும் கண்கணிப்புச் செய்ய விரும்புகின்றன. (மத்திய கிழக்கு, இந்திய மற்றும் பாகிஸ்தான், ஜோர்ஜியா மற்றும் எதியோப்பியா, எரித்திரியா போன்ற நாடுகள்). பொலிஸ் படை மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை வலுப்படுத்தும் குறிக்கோள்களே மேலும் அதிக சவால்மிக்க குறிக்கோள்களாகும். இவை பொஸ்னியா, கொசோவோ, கிழக்கு தீமோர் போன்ற தற்போதைய அமைதிபேணல் நடவடிக்கைகள் காட்டுவதுபோன்று மேலும் அதிகளவில் சவால்மிக்க குறிக்கோள்களாகும். இந்த இடங்களில் பொலிஸ் கருமப்பாடுகள்

மற்றும் சிவிலியன் மோதுகைத்தீர்வுக் கருமப்பாடுகள் என்பவை அவசரமாக மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஐ. நா அமைப்பு பணிக்குழு (MONUC) பூரணமாகப் பயண்படுத்தப்பட்டால் இவ்வறிக்கையில் இனம்கானப்பட்ட முழுவீச்சிலான பாடங்கள் குழுப்பணியினுள் பூரணமாக ஒன்றிணைக்கப்படவேண்டிய தேவை உள்ளது.

## 8. எதிர்கால விருப்புத் தெரிவுகள்

அமைதி பேணலும், மோதுகைத்தீர்வும் ஒரே மொழியைப் பேசும் நிலைமை ஆரம்பித்திருக்கையில் இவ்விரு துறைகளிலுள்ள எண்ணக்கருக்களை எவ்வாறு மிகச்சிறந்த முறையில் பிரயோகிப்பது என்பது சம்பந்தமாக, நடவடிக்கைரீதியாக கற்றுக்கொள்ளப்படவேண்டிய படிப்பினைகள் இன்னமும் பல உள்ளன. ஐ. நா வில் மாத்திரமன்றி, தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு அமைப்புகளிலும் சமாதானத்துக்கான ஆதரவு, மோதுகையைத் தடுத்தல் மற்றும் மோதுகைத் தீரவு போன்ற எண்ணக்கருக்கள் கூடுதலான அளவில் பயன்படும்போது இதன் அவசரத் தேவை மேலும் அதிகரிக்கும்.

கொசோவோ நிகழ்சிகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் கொள்கை அபிவிருத்தி மற்றும் மோதுகைத் தடுப்பு மற்றும் மோதுகைத் தீர்வு என்பவற்றுக்கிடையிலான உறவுகள்குறித்து சிந்திப்பதற்கான உணர்வூட்டும் அம்சங்களாக விளங்கியுள்ளன. மோதுகைத்தீர்வு அணுகுமுறைகளுக்கு இதே தேவைகளை ஏற்படுத்தும் பொதுவான ஐரோப்பிய பாதுகாப்புக் கொள்கைகுறித்த ஊக்கியாக விளங்கும் புதிய சட்டம் ஒன்று இப்பொழுது உருவாகியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் பெர்லினில் (ஜுன் 1996) ஒரு பொதுவான வெளிநாட்டு மற்றும் பாதுகாப்புக் கொள்கை உருவாக்கத்துக்கு அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட ஐரோப்பிய பாதுகாப்பு அடையாள அமைப்பை (ESDI) நிறுவியது. 1999 ஜுன் அளவில் கோலோனில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டைத் தொடர்ந்து இது ஐரோப்பிய தற்காப்பு மற்றும் பாதுகாப்பு கொள்கை அமைப்பாக (ESDP) பரிணமித்துள்ளது. ஹெல்சிங்கியில் இடம்பெற்ற டிசம்பர் உச்சிமாநாட்டில் 50000 - 60000 துருப்புக்களைக் கொண்ட ஓர் ஐரேப்பிய ஒன்றிய துரித எதிர்வினை படைணியொன்றையும், நெருக்கடி நிலைமைகளில் பயன்படுத்துவதற்கான சிவிலியன் மூலவளத் ஏற்பாடுகள் குறித்த குறிக்கோள்களும் அறிவிக்கப்பட்டன. 2000 ஜுன் சாந்தா மாரியாவில் இடம்பெற்ற ஐரோப்பிய மன்றத்தின் கூட்டத்தில் அங்கத்துவ அரசுகள் 2003 அளவில் 5000 சிவிலியன் பொலிசாரைக் கொண்ட ஒரு படையை வழங்குவதற்கான தமது விருப்பத்தை அறிவித்தன. இது சர்வதேசப் பணிக்குழுக்களின் தடுப்பு மற்றும் நெருக்கடி முகாமைத்துவக் கருமப்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். நேரகாலத்துடனான பதில்செயற்பாட்டை உறுதிசெய்யும் முகமாக 1000 சிவிலியன் பொலிசார் வழங்கப்படுவர்.இங்கு பதில்செயற்பாடுக்காலம் 30 தினங்களாகும். 1999 நவம்பரில் இடம்பெற்ற இஸ்தான்புல் உச்சிமாநாட்டில் ஐரோப்பாவில் பாதுகாப்புக்கும், ஒத்துழைப்புக்குமான அமைப்பு (OSCE) துரித நிபுணத்துவ உதவி மற்றும் ஒத்துழைப்பு அணிகளை (REACT) நிறுவும் விடயத்துக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டது(பிளெஸ்ச் மற்றும் சைமோர் 2000 2). பல கருத்துரையாளர்கள் தற்போது சமாதான ஆதரவு மற்றும் நெருக்கடி முகாமைத்துவ சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும் சிவிலியன் இயலுமை மட்டத்தை வலுப்படுத்தும் பிரயத்தனங்கள்குறித்து மென்மேலும் அதிகமான கரிசனைகளைக் காட்டி வருகின்றனர்.இராணுவத்துருப்பினர் பயன்பாடுகளுக்கு இன்னமும் போதுமான அளவு மூலவளங்கள் வழங்கப்படுகையில், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் சிவிலியன் முன்முயற்சிகளுக்கு கிடைக்கக்கூடிய நிதிவளங்கள் தீவிரமான முறையில் போதாத நிலையே தொடருகின்றது. பிரித்தானிய அமெரிக்க பாதுகாப்பு தகவல் மன்றம் (BASIC) சமீபத்தில் ஐரோப்பாவுக்கான சிவிலியன் முரண்பாட்டுத் தடுப்புசேவையொன்றை ஏற்படுத்துவதை ஆலோசனையாக முன்வைத்தது. இது போல்கன்ஸ் நாடுகளில் பயன்படுத்திய இத்தாலிய கராபினியரி போன்ற துணை இராணுவப்படை பொலிஸ் தரும் அலகுகள்

குறித்த அனுபவத்திலிருந்து எழுந்ததாகும்.இவர்கள் பொஸ்னியாவில் SFOR வினதும் கொசோவோவில் KFOR வினதும் பகுதியாகப் பணியாற்றினர் (அதே இடம்). இப்பிரேரணை நன்கு பாதுகாக்கப்பட்ட சிவிலியன் அணிகள் பட்டாலியன்களாக அல்லது அதையொத்த இராணுவம் மருவிய படைக்கட்டமைப்புகளில் இராணுவப்பாதுகாப்பை மேலும் இட்டுநிரப்பக் கூடியவகையில் ஒரு முழுவீச்சிலான மோதுகைத்தடுப்பு மற்றும் சமாதானத்தை மீட்டெடுக்கும் சேவைக்கான நோக்கத்துடன் அணிதிரட்டப்படக்கூடிய ஒரு மாதிரியை முன்வைக்கின்றது. பாதுகாப்பற்ற உயர்பதற்றச் சூழ்நிலைகளில் உயர்விகிதங்களிலான துணை இராணுவப்படை பொலிசாரைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். பதற்றம் குறைவான சூழ்நிலைகளில் படையினரில் உயர்விகிதசாரமான சிவிலியன் நிபுணர்கள் அடங்கியிருப்பர். இவர்கள், மனித உரிமைகள் இணக்கப்பாடு, ஆயுதக்கட்டுப்பாடு, பொலிஸ் மற்றும் சட்டப்பயிற்சியில் துறைத்தேர்ச்சியைக் கொண்டவர்களாக விளங்குவர்.

மேலும், ஸ்திரநிலையற்ற சூழ்நிலைகளில் ஒர் இராணுவக் கட்டளைத்தளபதியின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு வலுவூட்பெற்ற பட்டாலியனைச் சேவைக்கு அமர்த்தலாம். பொஸ்னியாவில் பயன்படுத்தப்பட்ட விசேட பொலீஸ் அலகுகளின் மாதிரியிலமைந்த செயற்பாட்டு ஆதரவுக்கம்பனியொன்று குற்றவியல் மற்றும் தேவைக்கேற்றவகையில் யுத்தக்குற்ற விசாரணையாளர்கள் மற்றும் உளவுத்துறை நிபுணர்கள், பொதுமக்கள் பாதுகாப்புப் பிளாட்டூன்கள்(கலகம் அடக்கும் பொலீசார்) மற்றும் இணக்கப்பாடு, மனித உரிமை அவதானிப்பு, ஆயுதக்கட்டுபாடு, பொலீஸ்பணி மற்றும் ஆயுதங்களைச் சேகரித்து அழித்தல் போன்றவற்றில் பயிற்சிபெற்ற நிபுணர் குழுக்களைக் கொண்டிருக்கும். இத்தகைய ஒரு பட்டாலியன் பெருமளவிலான ஆட்புலப் பொலீஸ் கம்பனிகளையும் கொண்டிருக்கும். இவர்களிடம் உளவு தகவல்களைச் சேகரிப்பதற்கும், வேவுபார்ப்பதற்கும் மற்றும் பிரச்சினைகள் எங்குள்ளனவென்று தேடியறிவதற்கு உதவும் வகையிலான இலகு கவச யுத்த வாகனங்கள் இருக்கும்.



BASIC திட்டத்தினால் கணீப்பீடு செய்யப்பட்டவாறு இத்தகைய ஒரு படைக்கான வருடாந்த ஆகுசெலவு சுமார் 2 பில்லியன் $ ஆகும். தலைமையகத்தின் ஆதரவுடனும், 3000 பேர் கொண்ட பயிற்சிப்பதவியினருடனும் 12,000 பேர்கொண்ட பயன்படுத்தக்கூடிய படையினர் இதில் பணியாற்றுவர்.இது ஐரோப்பிய ஒன்றியம் /NATO அங்கத்தவ நாடுகளுக்கான வருடாந்த மரபுரீதியான இராணுவ வரவு செலவுத்திட்டமாகிய 156 பில்லியன் டொலர்களுடனும், தற்போதைய ஐநா அமைதி பேணல் நடவடிக்கைகுக் குறித்தொதுக்கப்படும் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்துடனும் ஒப்பிடப்படக்கூடியதாகும்.

இக்குறிப்பிட்ட பிரேரணை பெரிதும் ஓர் இராணுவம் மருவிய மாதிரியின் கட்டமைப்பு அடிப்படையைக் கொண்டிருந்தபோதிலும், இது தற்போதுள்ள அமைதிபேணும் இயலுமைகளை சிவிலியன் நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் மோதுகைத்தீர்வு தடுப்பு துறைத்தேர்ச்சியினால் வலுப்படுத்த வேண்டிய தேவையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது. இவ்வாறே ஐ.நா முறைமையினுள் 1990கள் முழுவதும் வெள்ளை ஹெல்மெட்டுகளை உள்ளடக்கும் அமைதிபேணலின் அரசியல் மனித உரிமை மற்றும் சிவில் சமூக மீள்கட்டுமான பணிகளைக் கையாளக்கூடிய சிவிலியன் நிபுணர்களைக் கொண்ட பிரத்தியேக அலகுகளை உருவாக்குவதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுவந்துள்ளது. இக்காலகட்டத்தில் இராணுவப் பாதுகாப்புச் சவால்கள் தீர்க்கமாக நீல ஹெல்மெட்டுகள் கரங்களில் விடப்படும். 1995 டிசம்பரில் ஐ.நா பொதுச்சபை A-50 - 19 தீர்மானத்தை நிறைவேற்றியது. இது ஆர்ஜன்டீனாவினால் முன்மொழியப்பட்டு ஐ.நா அமைதிபேணல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக அபிவிருத்தியடையும் நாடுகளின் ஒதுக்கு இயலுமையை வலுப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட வெள்ளை ஹெல்மெட்டுக்கு முன்முயற்சியாகும்.

இதைநெருக்கமாகத் தொடரும்வகையில் அவசரகால மற்றும் இயற்கைஅனர்த்தச் சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படக்கூடிய சர்வதேச சிவிலியன் தன்னார்வப் பணிகளின் பிரிகேட்டை அமைக்கவேண்டுமென்ற ஒல்லாந்துப் பிரேரணையொன்று இடம்பெற்றது.

நோர்வேயும் இராணுவமல்லாத அமைதிபேணல் வடிவங்களை அபிவிருத்திசெய்வதில் முன்னோடியாகச் செயற்பட்டுள்ளது. 1990 களின் ஆரம்பத்தில் நோர்வேஜியன் அரசாங்கம் நோர்வேஜியன் நேரகாலத் தயார்நிலை முறைமையை ஏற்படுத்துவதற்கு (NOREPS) ஆதரவளித்தது. இது தனது முறைக்கு NORSTAFF என்று அழைக்கப்பட்ட ஒரு தயார்நிலை ஒழுங்கு முறைமையை வழங்கிய அ.சா.நிறுவனங்களின் ஒரு வலையமைப்பாகும்.இது 72 மணித்தியாளங்களில் பரந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைப் பயன்படுத்துவதற்கு வழிஅமைக்கும் ஒரு வலையமைப்பாகும். 1980களிலிருந்து ஜனநயகத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நோர்வேஜியன் மூலவள வங்கி ஐ.நா முகவர்நிலையங்கள் அல்லது மோதுகைத் தரப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் செயற்பட்டு, மோதுகைப் பிரதேசங்களுக்கு நிவாரணப் பணியாளர் அணிகளையும், மனித உரிமைக் கண்காணிப்பாளர்களையும் மற்றும் இணக்கப்பாட்டாளர்களையும் அனுப்பிவருகின்றது.

இப்பொழுது இந்தவகையிலான பல முந்நிகழ்வு உதாரணங்கள் உள்ளன. பொதுவாக அங்கத்துவ தேசங்களின் சிவிலியன் மோதுகைத்தீர்வுக்கு மூல வளங்களை ஒதுக்குவது சம்பந்தமான விருப்பம் மற்றும் இயலுமை என்பவை மட்டுப்படுத்தப்பட்டதாகவும், ,ஏமாற்றமளிப்பதாகவும் இருந்தவேளையிலும், இப்பொழுது இத்தகைய முன்னுதாரணங்கள் உள்ளன. 1990 களில் அமைதிபேணலில் கற்றுக்கொண்ட படிப்பினைகள் ஊடாக எதிர்காலத்தில் மோதுகைகளை அமைதிவழியில் தீர்த்துக்கொள்ளவேண்டுமாயின், பொதுவாக சர்வதேச சமூகமும், பிரத்தியேகமாக ஐ.நா அமைப்பும் செயல்திறன் மிக்க பங்களிப்பை வழங்க வேண்டும்.



## 9. உசாத்துணை மற்றும் மேலதிக வாசிப்பு

Annan, K. 1997. "Peace Operations and the United Nations: Preparing for the New Century," *Conflict Resolution Monitor,* Issue 1, (Centre for Conflict Resolution, Department of Peace Studies, University of Bradford).

Azar, E. 1990. *The Management of Protracted Social Conflict: Theory and Cases,* Darmouth: Aldershot.

Beattie, Clayton 1983 "Canadian Army," in H. Wiseman (ed.), *Peacekeeping: Appraisals and Proposals,* Oxford: Pergammon Press.

Betts, R.K. 1994. "The Delusion of Impartial Intervention," *Foreign Affairs*, 73, 6, 20-33.

British Army 1994. *Field Manual: Wider Peacekeeping,* Fourth Draft, London. Call, Chuck and Michael Barnett 2000. "Looking for A Few Good Cops: Peacekeeping, Peace buildingand CIVPOL," in Holm and Eide, op. cit., 43-68.

Chayles, A.H. and G.T. Raac 1995. *Peace Operations: Developing an American Strategy,* Washington DC: National Defense University Press.

Dobbie, C. 1994. "A Concept for Post Cold War Peacekeeping," *Survival,* 36, 121-148.

Holm, T. Tanke and E. Barth Eide (eds.) 2000. *Peacebuilding and Police Reform,* London: Frank Cass. Langille, P. 2000. "Conflict Prevention: Options for Rapid Deployment and UN Standing Forces," in Ramsbotham and Woodhouse, op. cit., 219-253.

Last, D. 1997. *Theory, Doctrine and Practice of Conflict De-Escalation in Peacekeeping Operations,* Nova Scotia: Lester B. Pearson Canadian International Peacekeeping Training Centre.

Last, D. 2000. "Organising for Effective Peacebuilding," in Ramsbotham and Woodhouse, op. cit., 80-96.

Luttwak, Edward. 1999. "Give War a Chance," *Foreign Affairs,* 78, 4.

Miall, H., O. Ramsbotham and Tom Woodhouse 1999. *Contemporary Conflict Resolution*, Cambridge: Polity Press.

Ministry of Defence 1999. *Peace Support Operations:* JWP 3-50, London: Ministry of Defence.

OSCE 1999. "Report of the OSCE Mission in Kosovo," in *UNHCR/OSCE Overview of the Situation of Ethnic Minorities in Kosovo.*

Plesch, D. and J. Seymour 2000. *A Conflict Prevention Service for the European Union,* Washington, DC and London: BASIC.

Ramsbotham, Oliver and Tom Woodhouse 1996. *Peacekeeping: Terra Incognita – Here Be Dragons – Peacekeeping and Conflict Resolution in Contemporary Conflict: Some Relationships Considered,* Ulster: University of Ulster, INCORE/United Nations University.

Ramsbotham, Oliver and Tom Woodhouse 1996. *Humanitarian Intervention in Contemporary Conflict: A Reconceptualisation,* Cambridge: Politica Press.

Ramsbotham, Oliver and Tom Woodhouse (eds) 2000. *Peacekeeping and Conflict Resolution,* London: Frank Cass.

Rieff, D. 1994. "The Illusions of Peacekeeping," World Policy Journal, 11, 3, 1-18.

Sharp, Jane 2000. *Evidence to Foreign Affairs Committee. Fourth Report on Kosovo. Vol. II*, London: House of Commons.

Stewart, R. 1993. *Broken Lives: A Personal View of the Bosnian Conflict*, London: Harper Collins.

United Nations 1999a. *Report on the Fall of Srebrenica, A54/549,* New York, NY, United Nations.

United Nations 1999b. *Report Of The Independent Inquiry Into The Actions Of The United Nations During The 1994 Genocide In Rwanda,* New York: United Nations.

United Nations 2000a. *Comprehensive Review Of The Whole Question Of Peacekeeping Operations In All Their Aspects,* Doc A / 55 / 305; S / 2000 / 809, New York: United Nation.

United Nations 2000b. *Multidisciplinary Peacekeeping: Lessons From Recent Experience,* New York, NY: UN Department of Peacekeeping Operations at *http://www.un.org/depts/dpko/view.htm.*

Wilkinson, P. 2000. *Peace Support Under Fire: Lessons from Sierra Leone Briefing Series,* Brussels: International Security Information Service.

Woodhouse, T. 1999. *International Conflict Resolution: Some Critiques and a Response, Working Papers,* Bradford: Centre for Conflict Resolution, University of Bradford.